ரிஜிஸ்டர் நெ. 3157 மலர் 1

# சிவ பக்தன்.

மாத வெளியீடு

T 1418

பவ-வருஷம் ஆவணித் திங்கள்




T.1418


பத்திராதிபர்:

வை. செ. குருசாமி ஐயர்,

குகை, சேலம்.

சேலம், செவ்வாய்ப்பேட்டை,

கோல்டன் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

## வேண்டுகோள்.

[illegible] பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது முதற் கடமை [illegible] ஆகையாலிதுதக்க [illegible] ரூ. 1—8—0 [illegible] இருங்கள்.

நம்ம பொருளானது பலவழிகளிலும் சிலவழிந்து விடுவது சஹஜமாயிருக்கிறது, ஆகையாலிப்படிப்பட்ட அறிவிற்குணவாகிய இப்பத்திரிகைக்கு சிலவிடுதல் சாலச்சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். இதிலுள்ள விஷயங்கள் ஆழ்ந்த கருத்துடையவைகளாகையால் ஒருமுறை வாசித்து விட்டுவிடாமல் சாவகாசமுள்ளபோது பலதடவைகளிலும் வாசிக்கில் விஷயங்கள் மனதுக்கு நன்கு புலப்படும்.

## சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| வருடமொன்றுக்கு தபாற் கூலியுள்பட | இந்தியா பர்மா சிலோன் முதலான உள்நாட்டிற்கு | ரூ. 1—8—0 |
| | பினங்கு சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலான வெளி நாடுகட்கு | ரூ. 2—8—0 |
| | தனிப் பிரதி ... | 0—2—0 |
| | மலாய் நாடுகட்கு 15-காசு அல்லது | 0—3—0 |

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா கிடையாது எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆவணி மாதமுதல் கணக்கு வைத்து ஆவணி மாதசஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும்.

## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| உள்பக்கம் ஒன்றிற்கு 1-மாதத்திற்கு | ரூ. 5—0—0 |
| அரைப்பக்கத்திற்கு | ரூ. 3—0—0 |
| கால் பக்கத்திற்கு | ரூ. 1-12—0 |

நீடித்த விளம்பரத்திற்கு எழுதிதெரிந்துக்கொள்ளலாம்,

பத்திராதிபர்

**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.

உ

மங்களமய.

ஸ்ரீநிஜகுரு லிங்காயநம:

# வீர சைவ மதாசார சங்கிரகம்.

———:C:———

## அநுஷ்டப்—சுலோஹம்.

தந்துவாட புரேரம்யெ ஸ்வேதாணும் ராஜமந்திர
தத்கார்ய யுக்தமந்தெௌச யுபயெள லிங்கதாரிணௌ (1)
துவாதசச் சாத்ரவாசோயம் குருலிங்கையநாமக :
மமதாபுர வாசச்ச பிரபுநாம சமன்வித : (2)
ஸ்வமதாபிமா னிநெளத நிர்ணயம் ஸ்ரோது மிச்சகெள
ஸ்ரீவீரசைவ சித்தாந்தம் ஏதௌது சமவிருச்சதாம் (3)
உத்சாஹ வ்ருத்தம்ப்ருபுரீ வீராஜமானசாரு வீரசைவசம்
சாரதூரகோரமாரணுத்மகோசத ஹாரஹீர சாரதாரகௌர
கீர்த்தியுக்த விக்யாதபூத சன்னவீரதேவ தேசிகோமுத (4)
ப்ருபுரீராஜமானச்ச யுக்மவிருஷெ மடாதிப :
சன்னவீர விபுபிராக்ஞோ சர்வதர்ம விசாரத : (5)
நிராபாரோ நிர்விகாரோ நிரஞ்ஜன சமன்வய :
த்வைதாத்வைத விஹீனஸ்ச சிவாத்வைத பராயண : (6)
ஸ்வகீயமத சித்தாந்த நிர்ணயம் வக்துமிச்சக :
சயேவசாதரம் க்ஞாத்வ உத்தரம் தத்தவான்முத (7)

## விருத்தம்.

உக்தம்மயாநுஷ்ட பசம்க்ஞ ஸ்லோகை :
சர்வைர் புதைர்லாலித வாக்ய யுக்தை
ஆசார்ய வர்யார்ச்சித புங்கவேன
ப்ருகோஷ வாசாதிக நாமகேன.

## மல்லிகா மாலா விருத்தம்.

தாரவாடதராஜமந்திர கார்யதோள்மிகெசுந்தவர்
வீரசைவ மதஸ்தராகுரு லிங்கசம்ப்ரபுஜமகர்
சாருலிங்கமதாதிபேத சுதர்மபாககளெல்லமம்
சாநுகன்னட வாதவாக்யகளிக்தபிராக்ஞருபேள்வுது. (1)

இப்படியாகக் கேட்டதற்குத்தரம் சொன்னதாவது

## விருத்தம்

ராயநாமக வாதப்ரூபுரசார தோள்மிகெ ராஜிப
ஆயவாதெர டெத்தி நாபிதசாத்ரதோள்சலெ சோபிப
காயமோஹ விதூரஞகி ஹசார சத்குண சாந்த்ரஞ
காயஜாரிய பக்தராகி ஹரார்ய ரார்யநுமோததிம் (2)

## விருத்தம்.

வீரசைவ மதஸ்ஞகி ஹராதி பேதக ளெல்லமம்
சாரபக்த வரேண்ய கௌரவ லிங்க ஜங்கமதம்தமம்
சூரிவர்க்கவு கேளிபண்ணிரு வம்தெசாஸ்திர சமூஹத
பூரிவாக்ய களிந்தபேளித சன்னவீர வரேண்யனு (3)

பூர்வத்தில் பரமேஸ்வரன் பார்வதிக்குச் சொன்னதாவது. ஏ பார்வதியேகேள் அஞதி காலத்தில் என் பஞ்சமுகங்களிலுற்பவர்களான பஞ்சாராத்தியர்களெனப்படும். 1 கண்டாகர்ண கணேஸ்வரர் 2 கஜகர்ண கணேஸ்வரர் 3 ரேணுக கணேஸ்வரர் 4 தாருக கணேஸ்வரர். 5 விஸ்வகர்ண கணேஸ்வரர்களென்னுமிவ்வைவர்கள் உற்பவித்தார்கள்.

பிறகு இவர்களே யுகபேதத்தினல் வேறு வேறு நாமத்தையடைந்தார்கள். அவையாவன் (1) ஏகாக்ஷரன் (2) த்வியாக்ஷரன் (3) த்ரியாக்ஷரன் (4) சதுராக்ஷரன் (5) பஞ்சாக்ஷரனென்று திரேதயுகத்தில் பிரசித்தியடைந்தார்கள். பிறகு துவாபர யுகத்தில் இப்பஞ்சமுக கணேஸ்வரர்களே (1) ஏகமுகன் (2) த்விமுகன் (3) திமுகன் (4) சதுர்முகன் (5) பஞ்சமுகன் என்று பிரசித்தாஞர்கள்

பிறகு கலியுகத்தில் இப்பஞ்சமுக கணேஸ்வரர்களே வேறு வேறு நாமங்களினுலுற்பவர்களாகி (1) எகோராம கணேஸ்வரர் ஹிமாலயத்தில் பிறந்தார் சுதாகுண்ட ஹிமோத்கேதாரமென்னும் க்ஷேத்திரத்திலிவரின் சிம்மாசனம், (2) பண்டிதாராத்திரியர் ஸ்ரீசைல பர்வதத்தில் ஸ்ரீ மல்லிகார்ஜுன லிங்கத்திலவதரித்தார் ஸ்ரீ சைலத்திலிவர் சிம்மாசனம் (3) ஸ்ரீ ரேவண சித்தேஸ்வரர் கோல்லிபாகி யென்னும் க்ஷேத்திரத்தில் சோமேச லிங்கத்தில் பிரதிபலித்தார் பாளெஹள்ளியில் ரம்பாபுரி யென்னுமிடத்திலிவரின் சிம்மாசனம் (4) ஸ்ரீ மருள சித்தேஸ்வரர் வடக்ஷேத்ரத்திலிருக்கும் சித்தேஸ்வரனென்னும், லிங்கத்தில் பிரத்யக்ஷராகி உஜ்ஜயனிபுரத்தில் சிம்மாசனத்தை ஸ்தாபித்தார். (5) விஸ்வாராத்தியர் ஸ்ரீ காசி விஸ்வேஸ்வர லிங்கத்திலுற்பவித்து, ஸ்ரீகாசியில் சிம்மாசனத்தை ஸ்தாபனம் செய்தார் இம்மாதிரியாக இவ்வைவரும், பஞ்ச லிங்கங்களிலுற்பவித்து பஞ்சப் பிரஹ்மகலசங்களைப் பூலோகத்தில் ஸ்தாபித்து ருத்விஜர்களாகி வீரசைவர்களுக்கு தீக்ஷை செய்து இப்பொழுது என் சன்னிதியடைந்த மாதிரியே பிறகும் கலியுகத்தில் இவ்வீரசைவ வம்சோத்பவர்களுக்கு தீக்ஷாநுக்ரஹ காரணத்திற்காக பூலோகத்திற்கு விஜயம் செய்து அவ்வவ்விடங்களில் வீரசைவர்களுக்கு உபதேசம் செய்வித்துத் தங்கள்வமிசத்திற் பிறந்தவர்களை பூலோகத்தில்விட்டுப் பிறகு நம்மையடைகிறார்களென்று பரமேஸ்வரன் பார்வதிக்குச் சொன்னதாக வீரசைவதர்மசிந்து யென்னும் கிரந்தத்தில் சொல்லியிருக்கிறது. அவ்வாதாரத்தினுல் மேற்சொன்ன பரமேஸ்வரன் பிராஹ்மணனுனதினுல் அவர்முகத்தி லுற்பன்னர்களான யெல்லா வீரசைவர்களும் வீரசைவ பிராஹ்மணரெனப்படுகிறார்கள்.

## ஸ்ரீபரமேஸ்வரனின்

எந்தெந்த முகத்தில் யார். யார். பிறந்தார்களென்னும் விபரம்.

| ஸ்ரீபரமேஸ்வரனின் பஞ்ச முகங்கள். | கிரேதாயுகத்தி லுற்பவித்தவர். | திரேதாயுகத்தி லுற்பவித்தவர். | துவாபரயுகத்தி லுற்பவித்தவர் | கலியுகத்திலுற் பவித்தவர். |
|---|---|---|---|---|
| (1) சத்யோஜாதம் | கண்டாகர்ணர் | ஏகாக்ஷரர் | ஏகமுகர் | ஏகோராமர் |
| (2) வாமதேவம் | கஜகர்ணர் | திவியாக்ஷரர் | திவிமுகர் | பண்டிதாராத்யர் |
| (3) அகோரம் | ரேணுகர் | திரியாக்ஷரர் | திரிமுகர் | ரேவணசித்தர் |
| (4) தத்புருஷம் | தாருகர் | சதுராக்ஷரர் | சதுர்முகர் | மருளசித்தர் |
| (5) ஈசானம் | விஸ்வகர்ணர் | பஞ்சாக்ஷரர் | பஞ்சமுகர் | விஸ்வாராத்யர் |

வீரசைவர்களுக்கு வீரமாஹேஸ்வரர்களென்றும் அப்ராகிருத பிராமணர்களென்றும் சிவாசாரத்தவர்க ளென்றும் லிங்காதாரக ரென்றும் லிங்காயுதரென்றும் கன்னடபாஷையில் பெயர்களுண்டு இவ்வகை வீரசைவதர்மசிந்து யென்னும் கிரந்தத்தில் விஸ்தார மாகச் சொல்லியிருக்கிறது.

சுலோஹம்

அஷ்டாவரணசம்பன்ன : பஞ்சாசாரபராயண :
வைதிகம்கர்ம குர்வீத க்ஞானைக பலசாதனம்

என்னும் வசனத்தின்பிரகாரம் குருலிங்கஜங்கமாத்யஷ்டா வர்ண பஞ்சாசார பராயணராகியும் க்ஞானசாதகமான வேத்தோக் தகர்மாநுஷ்டான நிஷ்ட ராகியும் ஸ்ரீரேணுகாதி பஞ்சாசார்யர் களின் கோத்திர, சூத்திர, பிரவரங்களுள்ளவர்களாகியும் குருபீடா ரோஹணர் களாகியும் சமஸ்த சாமான்ய விசேஷ வீரசைவ ஜனவந்தியராகியும் நிராபார வீரசைவபதத்தை யடைந்தவர்களா கியும் அடையத் தக்கவர்களாகியு மிருப்பவர்களே விசேஷ வீர சைவர்களெனச் சித்தாந்தமாயிற்று.

பிரம்ஹ, க்ஷத்ரிய, வைஸ்ய, சூத்திர ரென்னும் சதுர் வர்ண மும் சைவம் (சிவமதம்) வைஷ்ணவம் (விஷ்ணுமதம்) சாக்தேயம் (சக்திமதம்) சௌரம் (சூரிய மதம்) காணபதம் (கணபதி மதம்) கா பாலிகம் என்னும் ஷண்மதங்களும் இன்னும் பிரஹ்மாசர்யம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாஸ மென்னும் ஆஸ்ரம சதுஷ்டயமும் அவ்வாஸ்ரம சதுஷ்டய விகாரங்களுக்கு சுருதிஸ் மிருதிகளே காரணமாகும். இவ்வாஸ்ரம சதுஷ்டயங்களுக்கு யதாயோக்கியமாக பிராம்ஹணாதி வர்ணத்திரயமே அதிகரணம் (இடம்)மதங்கள் மாத்திரம் பிராம்ணாதி வர்ண சதுஷ்டயத்தி லும் சமானமே பிராஹ்மண வர்ணத்தவர்கள் துர்பலங்களான சாக்தேயம் சௌரம் காணபதம் காபாலிகமென்னும் மதங்களின் அசாரங்களை விட்டு பிரபலமான சைவ வைஷ்ணவ மதங்களை மாத்திரம் திருடமாக அவலம்பித்தார்கள். க்ஞானவிஷயமாக யோக சாங்கிய, நியாய, வைசேஷிக, பூர்வமீமாம்சை, உத்தர மீமாம்சை யென்னும் ஷட் தர்சனங்களுள் உத்தரமீமாம்சை

யென்னும் வியாசசூத்திரத்தின்மேல் அனேக மதங்களுண்டானதாகவும் அவைகளெல்லாம் சிலநாட்களிருந்து லிலமாய்ப்போய்ப் பிரகிருதத்தில் (5) மதங்கள் பாஷ்யபிரக்யாதிகளா யிருக்கின்றன அவையாவன:- சைவரில் மிசிரசைவர்கள் சங்கராசார்யரால் பிரபலமான அத்வைத பாஷ்யமும், சுத்தசைவர்கள் நீலகண்டநாகநாதாசார்யராலுண்டான சிவாத்வைத பாஷ்யமும், வீரசைவர்கள். நீலகண்ட சிவாசார்யராலருளப்பட்ட சக்திவிசிஷ்டாத்வைதபாஷ்யமும், வைணவரில் ஸ்ரீவைஷ்ணவர்கள் ராமாநுஜாசார்யரால் நிர்மிதமான விசிஷ்டாத்வைதபாஷ்யமும், ஆனந்ததீர்த்தியர்கள். மத்வாசார்யராலுண்டான த்வைதபரமான பாஷ்யமும் பிரமாணமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வைந்து பாஷ்யங்களே பிராஹ்மணர்களில் ஐந்துமதங்களுண்டாவதற்கு ஹேதுக்களாயின. ஆனால் சிவாத்வைத சக்திவிசிஷ்டாத்வைத மதங்களையறியாமல் சிலர் உலகத்தில் பிராமணரில் மூன்று மதங்களே யுள்ளதென்றும் வேறுமதமில்லை யென்றும் உன்மாதத்தினால் நாநாவிதமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் சிவாத்வைத மதஸ்தர்கள் இப்பிராந்தியத்தி லில்லாதகாரணம் அவர்களின் விஷயத்தில் அபாவஞானமுண்டாகலாம். சேது ஹிமாசலம் வரையில் பிரசித்தமாயிருக்கும். சக்திவிசிஷ்டாத்வைத மதஸ்தர்கள் பிரத்யக்ஷமாயிருந்தாலும் அநேகர்கள் அம்மதத்தை பிராஹ்மணோபாதேய மென்றறியாமல் ஸ்வபிரதிஷ்டையினால் சதசத் விவேகசூனியராகி அம்மதஸ்தரைத் தூஷித்து புரட்சிசெய்து தோஷிகளாகிறார்கள்.

மஹாஜனாயேன கதஸ்சபந்தா :

என்னும் வசனத்தின்படிக்கு அவரவர்களின் முன்னோர்கள் நடந்தமார்க்கமே அவரவர்களுக்குப் பெரிதென்றும் இம்மதங்களைந்தும் வேதமூலங்களென்றும் விசாரிக்காமல் ஒருவன் மற்றொருவனின் மதத்தைத் தூஷித்து நான்பெரியவன் தான்தான் பெரியவனென்னும் ஆக்ரோஷத்தினால் பரஸ்பர வைரிகளாகி கலகம்செய்துக் கொண்டு காலங் கடத்துகிறார்கள். ஓரே ஜாதியில் ஜனங்களின் மதம் வேறுபட்டிருப்பதால் இவ்வளவனர்த் தங்களுக்கு ஆளாகலாமா. இன்னும் தன்மதத்தைதான் பெரி

தென்று தெரிந்தாலும், இரண்டாவது மதத்தை தூஷிக்காம லிருப்பது பிராக்ஞரின் (பெரியோர்களின்) தர்மமானதினால் இதைவிட்டுச் சிலர் பரமத தூஷணைப் பூர்வகமாக ஸ்வமதத்தைச் சிலாக்கித்துக் கொண்டு மதத்துவேஷிகளாக யிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எவ்வளவு தர்மத்தைப் போதித்தாலும் சர்ப்பத்திற்கு பால் ஊற்றின மாதிரியே யாகும்.

சுலோஹம்.

சதாசிவ மஹேசாதி பூர்வாசார்ய பிரதிஷ்டிதம்
உபதேசபலாட்டிப்ய பாரம்பர்பக்ரமாகதம் (1)
வினஷ்டம் கலிதோஷேன புனரேவசிவோத்ருதம்
யதாயதாஹிசை வஸ்ய, க்லாநிர்பவதிபூதலெ (2)
சிவஸ்ததாஸ்வமே வாஞ்ச மவதாரயதிதுருவம்
சிவாம்செ நோத்ருதம் க்ஞானம்புனரேவ பிரதிஸ்டிதம் (3)
சேதகம் பசுபாசஸ்ய சிவசாரூப்ய காரணம்
எவம் பிரவர்த்திதெசக்ரெ கதாசின்னா தோபுவம் (4)
சிவதர்மவிஹீனாந்து க்ஞானத்வாகைலாச மேத்யச
விக்ஞாபயாமாச ததா பிராரத்தயா மாசசங்கரம் (5)
சிவாக்ஞ யாததோதேவீ ஜக்ஞேசா நாகலாம்பிகா
குமாரஸ்சன்ன பசவோ நாம்நாஜக்ஞி சிவஸ்வயம் (6)
நந்தீச பசவோநாம தஸ்யமாதாமஹோபவத்
ப்ரமதா ஜக்ஞரதத்பல் லிங்கிநோ புவிஜங்கமா : (7)
பிஜ்ஜளாக்யோர் மஹீபால சிக்ஷிதஸ்தெ நதர்மத :
சரித்ரம் வீரசைவானாம் கதாபெ : பிரகடீர்ருதம் (8)
சித்தராமக்ருதெசன்ன பசவஸ்யோ வதேசத :
பசவஸ்ய சரித்ரேண வ்ருஷபாபரசர்மண : (9)
வீரமாஹேஸ்வராம் சாஷ்தெ யோகசித்தாமஹாபலா :
ச்ஞாத்வா ஷட்ஸ்தல்தத்வ க்ஞலிங்கஜங்கமபக்தித : (10)
பாதோதக பிரபாவாதி கஹராதனலக்ஷணம்
மஹாத்மியம் சரமூர்த்தீனும் ததா பிராயோபவேசனெ (11)
வாதினும் விஜயம்சாபி மூர்த்திசஞ்ஜீவனேனச
அமாநுபஞ்சமஹாத்மியம் கலெளகல்யாணபட்டினெ (12)
பிரகாஸ்ய வீரசைவந்து வர்த்தயே யுர்னசம்சய :
இத்யுக்தம்பூர்வமேவா சீத்வசந்தோ வீரயேவச (13)
பவிஷ்யதி புனச்சேதி பெளராணம் சைவசம்மதம்

சதாசிவ மஹேஸ்வராதிகளினால் உபதேசக்கிரமமாக சிஷ்ய பரம்பரையில் வந்துள்ள ஸ்ரீ வீரசைவமதாசார ரஹஸ்யம் யுகபேதத்தினால் பாபிஷ்டர்கள் பிரபலமானபோது சிதிலமான (கலைந்த)தினால் சிவதர்ம சமஸ்தாபனார்த்தமாக பரமேஸ்வராம்சங்கள் பூமியிலவதரித்து மனுஷ்யரூபமான ஜைன மிலேச்சாதி பரவாதிகளை நிக்ரஹித்து மஹிமைகளைக் காண்பித்து சிவதர்மத்தை பிரதிஷ்டாபனம்செய்யும் விதிகிரமத்தின்படிக்கு அவ்வக்காலங்களில் நடைபெற்றுவருகின்றன அதேமாதிரியாக இக்கலியுகத்திலும் நாரதரின் பிரார்த்தனையினால் பரமேஸ்வரனின் ஆக்ஞையையனுசரித்து சிவசக்தியே நாகலாம்பிகையாகவும் குமாரரூபமான சிவகளையே சந்னபசவனாகவும் இன்னும் நந்தீஸ்வரனே பசவண்ணனாகவும் பிரதமகணங்களே கணாதீஸ்வர சரமூர்த்திகளாகவும் கல்யாணிபட்டணத்திலவதரித்து பிஜ்ஜளராஜன் முதலானவர்களுக்கு மஹிமைகளைக் காண்பித்து துருகாண்யத்தில் மஹாத்மியங்களைக் காட்டி ஜைனர்களை நிக்ரஹம் செய்து வாதிகளைத் தோற்கடித்து பரவாதிகளைக் கெலித்து பிரத்யக்ஷ நிதர்சனங்களினால் நிகமாகம சம்மதமான விசுத்த வீரசிவாசார சம்பிரதாயத்தை லிங்கதீக்ஷா ஷடுஸ்தல க்ஞானாதிகளையும் சிவயோகாதிரஹஸ்யங்களையும் குருலிங்க ஜங்கம மஹாத்மியங்களையும் பாதோதக பிரபாவத்தையும் கணாராதனையின் பிரயோஜனத்தையும் சிவதர்ம பிரபாவத்தையும் நிலைநிருத்தினார்களென்பது சைவபுராணசித்தமாக (770) பேர் அமரகணங்களின் அவதாரங்களினாலும் சரமூர்த்திகளின் அவதாரங்களினாலும் பசவாதி பிரமதரின் அவதாரங்களினாலும் லக்ஷாந்தர கணங்களின் ஆராதனையினாலும் வீரவசந்தாதி காலக்ஞாபனத்தினாலும் ஸ்ரீ பிரபுதேவர் பண்டிதாராத்யாதி சம்ப்ரதாய பிரவர்த்தனத்தினாலும் இன்னும் ஜங்கம பிரதிஷ்டாபனத்தினாலும் மூன்றுகோடி வீரசைவரின் விருத்தியினாலும், இன்னும் சித்தாந்த கிரந்தங்களினாலும் சப்பிரமாணமாயிருக்கும். ஸ்ரீ வீரசைவமதம் பிரபஞ்சத்தில் பிரக்யாதியா யிருக்கிறதென்று சூட்சுமமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இன்னு மிவ்விலிங்காயத மதோற்பத்தி யெப்படியாயிற்று. இன்னு மிம்மதத்திற்கு கர்த்தன்யார் இம்மதம் எக்காலத்திலுதித்தது இம்மதத்தின் தர்மமென்னவென்று கேட்கும் நான்கு வினாக்களுக்குத்தரம் கூறுகின்றார். (தொடரும்)

ஸ்ரீபஞ்சா சார்யேப்யோ நம:

# ஸ்ரீருத்ரபாரதமென்னும் பிரஹ்மாண்ட புராணம்.

## ஸ்ரீருத்ரேளவாச சுலோகம்.

தேவோ முனி த்விஜோ ராஜ வைஸ்ய சூத்ர பிடாலக:
பசுமிலேச்ச சண்டாலோ தசவிப்ர பிரகீர்த்தித: (44)

பிராம்ணர்கள் ஆதிருத்திரன் வதனத்தில் நிர்மிதமானார்கள். அவர்களின் நாமங்கள், (1) தேவப்பிராம்ணர், (2) முனிப்பிராம்ணர், (3) த்விஜப்பிராம்ணர், (4) ராஜப்பிராம்ணர், (5) வைஸ்யப்பிராம் ணர், (6) சூத்திரப்பிராம்ணர், (7) பிடாலப்பிராம்ணர், (8) பசுப் பிராம்ணர், (9) மிலேச்சப்பிராம்ணர், (10) சண்டாலப்பிராம்ணர் இப்படியாக தச (பத்து) விப்ரர்கள், தங்கள் நடத்தையினால், விப்பிரரானார்கள். இன்னும்,

(1) கம்மெகண்யர், (2) கன்னடியர், (3) வாணிஜ்யர், (4) ராமா நுஜர், (5) சாத்தியர், (6) மாயாவாதிகள், (7) மார்த்வஜன்னியர், (8) பிரதமசாகெயர், (9) ருக்வேதிகள், (10) த்விதீய சாகெயர் (11) யஜுர்வேதிகள், (12) த்ரிதீயசாகெயர், (13) சாமவேதிகள், (14) சதுஷ்சாகெயர், (15) அதர்வணவேதிகள், (16) ஸ்மார்த்தர், (17) பாகவதர், (18) சைவர், (19) ஸ்ரோத்தியர், (20) உபாதிகர், (21) வைஷ்ணவர், (22) ஜ்யோதிஷர், (23) வைதிகர் என்னுமிப் படிப்பட்டவர்களுக்கு யமவிரதமான விரதம், கிருஹஸ்தாஸ்ரமம் ஆசாரம் பிராயச்சித்தம், இவை பிராம்ஹேபதேசம், ஷட்கர்மம் சோடச கர்மம் இன்னும் ஏகவிம்சதி கோத்திரமுடைய விப்பிர ருக்கு முனிகள் ஜாதம். வேதபாராயண பிராஹ்மண உபநயனக் ரியா மார்க்கம், யோமார்ஜ்ஜன யஜனம், யாஜனம், அத்யயனம், அத்யாபனம், தானம், ப்ரதிக்ருஹபாரமேஷ்டி கோத்ரம், பூசுரபாளி அடம், அருள், மருள்ஞானம், அஞ்ஞானமூலம்.

## சுலோஹம் (2)

ஜம்கேன ஜாயதெ சூத்ர கர்மணு த்விஜமுச்சதே
வேதப்யாச பவெவிப்ர ப்ரஹ்மஜானுதி பிராஹ்மணம் (46)
சத்யப்பிரஹ்ம தபோபிரஹ்ம பிரஹ்ம பஞ்சேந்திரிய நிக்ரஹம்
சர்வபூத தயாபிரஹ்ம இத்யைதெ பிரஹ்ம லக்ஷணம் (47)
சத்யம் நாஸ்தி தபம்நாஸ்தி நாஸ்தி பஞ்சேந்திரிய நிக்ரஹம்
சர்வபூத தயம்நாஸ்தி, இதிசண்டால லக்ஷணம் (48)

### நந்தீஸ்வராவாச சுலோஹம் (3)

யஸ்யான்ய பிரஹ்ம கர்மேண தஸ்யாச மஹிமப்ரியெ
க்ருஹின்ருணத் விசேஷேண பஹி : கர்மேண தத்விஜ : (49)

யாரொருவன் எக்குலத்வனானாலும்சரி பிரஹ்மத்தை யறிந்தால் அவனே பிராம்ணன். இன்னும் " ஜன்மோபி ஜாயதே சூத்ரம் " என்றும் அதாவது விப்பிரன் பிறக்கும்போதே சூத்திரனென்றும் சோடசகர்மம் ஷட்கர்மத்தினால் மௌஞ்ஜிகபந்தனம் செய்து வேதமந்திராப்பியாச யுக்தரானால் அப்பொழுது விப்ரனாவான். ஆனதினால் பிரஹ்மத்தைத் தெரிந்தாலவன் பிராஹ்மணன் பிரஹ்மத்தை யறியாதிருந்தாலவன் சண்டாளன் கர்ம சண்டாளனை விட ஜாதிசண்டாளனே உத்தமன். இன்னும் " சத்ய பிரஹ்மம் " என்றால் நடத்தை தப்பாமல் வார்த்தை தப்பாமல் மற்றும் நீதி, த்ருடம், மனம், மஹாவ்ரதம் இவைகளில் தவருதலில்லாமல் நடப்பவனும் அடிக்கடி சத்விரயம் செய்பவனும் சத்தியமென்னும் வித்தை நிலைநாட்டுபவனும், கெட்ட கருமங்களை யறவிட்டவனும் பக்திஞான வைராக்யத்தைச் சித்தத்திற்கு லைபனம் செய்பவனும் பிரஹ்மோபதேச பதத்தினாலேயே நடந்து மற்றவருடைய கட்டளையைத் தானறிந்துத் தன்னையீன்ற தாய்தந்தைகளைப் பரிபாலிக்கும் உத்தமமான குருதாசோஹமம் செய்பவனுமாகிய இப்படிப் பட்டமூர்த்தி எக்குலத்தவனானாலும் சரி அவனே பிராஹ்மணன். இன்னும் " தபோபிரஹ்ம ,, மென்றால் (1) இயமம், (2) நியமம், (3) ஆசனம், (4) பிராணயாமம், (5) ஹோமம், (6) அர்ச்சனை, (7) அனுஷ்டானம், (8) அர்க்யம், (9) பாத்யம், (10) ஆசமனீயம் புஷ்பாஞ்ஜலி சமேதமாக சமர்பணம் செய்பவன் எக்குலத்தவனானாலும்சரி அம்மூர்த்தியே பிராஹ்மணன். இன்னும்

### பஞ்சேந்திரிய நிக்ரஹம். (4)

பிரஹ்மம் என்றால் பஞ்சேந்திரிய நிக்ரஹம், தசேந்திரியத்தை பந்தனம்செய்து மோஹம், விஷயம், காம்க்ஷை, என்னும் ஈஷணத்திரயங்களான விஷயங்களை விட்டு இட, பிங்கல, சுசும்னவென்னும் நாடித்திரயங்களை ஏகம்செய்து பொன் பெண் மண் என்னும் மலத்திரயங்களை விசர்ஜித்து மாயாபாசத்தைக் களைந்து

தன்னைத் தானறிந்து சம்யுக்தனானவன் எக்குலத்தவனானாலும்சரி அப்புருஷனே பிராஹ்மணனென்று சொல்லப்பட்டது. இன்னும் "சர்வபூத தயாபிரஹ்ம" மென்றால் சகல பிராணிகளையும் தன்னுயிர் போலத் தெரிந்து சமஸ்தத்திலும் ஹரதேவனென்று நினைத்து யத்ரஜீவ தத்ரஜீவனான சர்வஜந்தேஷு சர்வஜீவ தயாபரான்.

## (2) சிவஞ்ஞானம்.

### ஸ்ரீ ருத்ரேளவாச சுலோஹம்

யஸ்யஜ் க்ஞானம்ச மோக்ஷம்ச கிம்ஜடா பஸ்மலேபனம்.

சிவக்ஞானமென்னும் சிவநாமாம்ருதமே சித்தகனமென்னும் பால் சர்க்கரையை ஆரோகிக்கும் மாதிரியாக பஹிதார்த்தமாக யோனிமுக சௌராசி லக்ஷஜீவிகளைத் தன் ஜீவனென்றுக் காண்பது இப்படிப்பட்ட புருஷனுக்கு கிரியை கர்மம் ஒன்றுமணுகாது கிம்ஜடா பஸ்மலேபன மென்பதுண்டாகி அப்புருஷனுக்கு விபூதி, ருத்ராக்ஷம், பாதோதகம், பிரசாதம், சிவலிங்க பஞ்சாக்ஷரிகள் ஒன்றும் அணுகாது. அம்மூர்த்தி தானே ஷட்குணைஸ்வர்ய சம்பன்னன் எப்படியென்றால் (1) தானே குருவும், (2) தானே லிங்கமும், (3) தானே ஜங்கமம், (4) தானே விபூதி, (5) தானே ருத்ராக்ஷம், (6) தானேபாதோதகம், (7) தானே பிரசாதம், (8) தானே மந்திர மென்னு மிவ்வெட்டும் தனக்குள்ளே ஐக்யமான காரணம் தானே சிவன்காணும் நந்தீஸ்வரா.

## (3) ஏகாதச பிரசாதங்கள்.

ஏகாதசஸ்ச சேஷச்ச தசபாதோதகம் பவேத்
அனுபாவந்த ராத்மானும் ததுசை தன்ய லிங்கயோ : (50)
சம்னுதம் சங்க யோர்லிங்கம், மனக்ஞானம் சதாசிவ :
ஜபம்சத்ய தபம்நித்யம் மன பவன பிந்தயோ : (51)
மனோர்லய மிதம்நந்தி சர்வலிங்க மயம் ஜெகத்
சர்வதீர்த்த சமாயுக்தம் பாததீர்த்த சமுச்யதே (52)
கோடிலிங்க மிதம்பாவோ பிரசாதம் திரிவிதான்முதம்
நித்யசேவித மூர்த்தீனும் மமரூபம் மஹோக்ஷஜா (53)
சமதோபஸ்ம முத்தூள்யம் ருத்ராக்ஷ மணிபூஷணம்
சுசிர்பூதஸ்ய ரூபேண, விஷயஸ்ய நரோபிவா (54)

தண்டமண்டல முந்தாணும் பரத்வம் பாணிகர்ப்பரம்
த்வைதக்ரிய பவேநாஸ்தி பாவத்வைதசமாசரேத் (55)
கிரியாபாவ சமாயுக்தம் நிஷ்க்ரியம் மமதேவதா
ஏகாதச பிரசாதம்ச தசபாதோகஸ்மிருத : (56)
தாசத்வேனகதா க்ருத்தியம், வீரதாசோஹ முச்யதே
ப்ருத்யபாவசமுத்பத்யம் சமயாசாரஷட்விதம் (57)

## பிரசாதங்கள், 11-விதம்.

பதினொருவித பிரசாதங்களே கிரியாசாரம் சமதை சத்பாவ முள்ளது. இவைகள் ஏகாதசப் பிரசாதங்களெனப் பெயர்.

(1) சுத்தப் பிரசாதம் சிவலிங்க முகத்திலுதித்தது
(2) சித்தப் பிரசாதம் குரு முகத்திலுதித்தது
(3) பிரசித்தப் பிரசாதம் ஜங்கம முகத்திலுதித்தது

சத்பக்தி சிவமந்திர சம்ஸ்காரமான பிரசாதம், சதுர்த்தள மத்தியத்துளிருந்த பக்தன் ஆசாரமுகத்திலுண்டானது, ஆக்ராண முகத்தி லற்பிதமாவது, வாசனைகொள்வது,

(4) பரமப்பிரசாதம், அல்லது பரஞ்சோதி பிரசாதம், கர்ணிகாவாச ஷட்தள மத்தியத்திலுள்ள மஹேஸ்வர வீரமாஹேஸ்வர ஆசாரசங்க்ரஹம், சத்குருமுகத்திலானது, சிங்குவை முகத்தி லர்ப்பிதமாவது, சத்பாவ வசனமானது.

(5) பரதத்துவப் பிரசாதம், அல்லது நிராகுளசிவப்ரசாதம் குண்டலிய நண்டெலெவவாசம், தசதளமத்தியத்திலுள்ள பிரசாதிஸ்தலத்தின் சிவலிங்க முகத்திலானது, நேத்ர முகத்திலற்பிதமாவது, நிதானமாக ஊன்றிப் பார்ப்பது.

(6) பரவஸ்துப் பிரசாதம், அல்லது ஊர்த்வரேதோ ஜங்கமப் பிரசாதம், மனம், பாவனை, பிந்துவின் ஊர்த்வமுகவாசம், துவாதச மத்தியத்திலுள்ள பிராணலிங்கஸ்தலத்து ஜங்கம முகத்திலானது, ஹிருண்முகத்தி லர்ப்பிதமாவது, மிருதஸ்பர்சனம், கடினஸ்பர்சனம், சீதளஸ்பர்சனம், உஷ்ணஸ்பர்சனத்தில் முட்டுவது.

(7) நித்யதிருப்தி குருலிங்கப் பிரசாதம், அல்லது, பராத்பர பிரசாதம். பேதாதிபேதங்களினால் பிரணவ மூலம் தெளிந்த வாசம், சோடசதளமத்தியத்திலுள்ள சரணஸ்தலபிரசாதம் லிங்க முகத்திலானது ஸ்தோத்திர முகத்திலிர்ப்பிதமாவது, கேட்பது.

(8) பரப்பிரம்ம பிரசாதம், அல்லது முக்திபீஜமஹேஸ்வரப் பிரசாதம் மேதினியின்கலை மொளலையை ஒன்றுசேர்த்து நாத பிந்துகளைச் சிவகலைக்குள் நிருத்தினவாசம், த்விதளத்தின் மத்தியிலுள்ள ஐக்யஸ்தலம், மகாலிங்க முகத்திலானது, உன்மய முகத்திலர்ப்பிதமாவது, விசாரிப்பது, பரமானந்து.

(9) மூலப்பிரசாதம், அல்லது சத்தியன்முக்தி பராத்பரப் பிரசாதம், பிரம்மாண்டத்தை ஏகத்ரயம் செய்து ஹம்ச் ஹம்ச ஜபத்தின் ஜம்ஜடத்தினால் பரமஹம்சவாசம் சஹஸ்ரதள மத்தியிலுள்ள வைராக்யஸ்தலம், இஷ்டலிங்கமுகத்திலானது, பிரம்மரந்திர முகத்தி லர்ப்பிப்பது, சுக்ஞானம் தெளிவது.

(10) பராத்பரப் பிரசாதம் அல்லது, சச்சிதாநந்த மோக்ஷாநந்தப் பிரசாதம், " நிஸ்ஸப்தம் பிரஹ்மமுச்யதே ,, என்னும் வாசம் திரிதள மத்தியிலுள்ள நிர்பாவ ஸ்தலத்தின் திருப்திலிங்க முகத்திலானது, அப்ரசித்தியமுகத்தி லர்ப்பிப்பது, சடுஸ்தல பிரஹ்மத்தைத்தியானித்து, லக்ஷியம்வைத்த பிரசாதம்.

(11) ' பரிணாமப் பிரசாதம் , ஆனந்த பரமானந்தசுகம் தலைக்கேறுவது. ஆக இவைகள் (11-ம்) ஏகாதசப் பிரசாதங்கள்.

## (4) தசவித பாதோதகங்கள்.

(1) பாதோதகம், ஜங்கமபாத பூசை செய்த தீர்த்தம், லிங்காபிஷேகம் செய்வது, சிரசில் தெளித்துக்கொள்வது, ஆரோகிப்பது.

(2) பிரசாத பாதோதகம், மூன்று தடவை முட்டிமுட்டி குருலிங்கஜங்கம மென்னும் திரிவிதஸ்தலத்தின், கண்டெனய மண்டெயில் சலிப்புண்டானது, குருபாதத்திலானது, எடுத்து நேத்திரத்திற்கு ஒற்றிக்கொள்வது, குருஸ்தலமானது, 'லிங்கஸ்தலம், ஜடாமகுடமுள்ளது, ஜங்கமஸ்தலம், ஆரோகிப்பது இது மூன்று ஸ்தலத்தின் நிர்ணயம்.

(3) லிங்கோதகம், லிங்காபிஷேகம் செய்தஜலம், லிங்கதீர்த்தம், ஆரோகிப்பது, சிரசின்மேல் தெளித்துக்கொள்வது, லிங்கத்ரோஹ ஜங்கமபாதாங்குஷ்டத்திலிருந்து வந்தது, லிங்க தீர்த்தமும், பக்தன் பாததீர்த்தமும் இரண்டு மொன்றே.

(4) ஞானோதகம். மந்திரத்தினால் விபூதிதாரணை செய்யும்போது லிங்கபாஜனத்தின் பசிதோதகம், கிரகிப்பது.

(5) மந்த் ரோதகம், பத்மாசனத்தில் திருடசித்தத்திலுட்கார்ந்து ஜபத்தினாலும், லிங்கவங்கதியானத்தினாலும் ஆக்ரோதகம் கிரகிப்பது.

(6) பரமோதகம், தியானபூர்வகமாக நிர்த்தேஹநிரூபமத ககணிங்க்ணமாக நின்ற ஜலத்தை ஆரோகிப்பது.

(7) பாவோதகம், சஹபாஜன துர்ச் சொர்ப்பனம் காணமல் துர்விகாரத்தில் நடக்காமல் மனோவிகாரமென்னும் த்ருணதர்ப்பையை பிரணவ தியானக்கினியினால் தகனம்செய்து மலமூத்திரத்தால் பிறந்த அங்கசூதத்தை நீக்கிக் கல்களினாலுண்டான சிலையின் சூதகத்தைப்போக்கி அங்கலிங்கம் ஏகம் செய்து அங்கமே லிங்கபாஜனம், லிங்கமே அங்கபாஜனம் அங்கலிங்க யேகத்ரயமானது சஹபாஜனம்,

(8) சேஷோதகம் பரிதார்ப்பணம்.

(9) ஹஸ்த்தோதகம், குசித்த ஹஸ்தத்தைக் கழுவி சுசித்தம் நிலைகொண்டோதகம், அகங்கார ஹஸ்தத்தைக் கழுவி நிரஹங்காரம் நிலைகொண்டோதகம், குபுத்தி ஹஸ்தத்தைக் கழுவி சுபுத்தி நிலைகொண்டோதகம், குமன ஹஸ்தத்தைக் கழுவி சுமனம் நிலைகொண்டோதகம், அஞ்ஞான அஸ்தத்தைக் கழுவி சுஞ்ஞானம் நிலைகொண்டோதகம், குபாவ ஹஸ்தத்தைக் கழுவி நிர்ப்பாவம் நிலைகொண்டோதகம், சுத்த சித்த பிரசித்த மென்னும், சேஷத்தை ஆனந்தித்து ஊர்த்வ ரேதோமுகத்தை மேலுக்கெடுத்து பாணிய சிவசுகத்து சமஸ்கார ஜலத்தை சிங்குவைக்கு முட்டிப்பது, ஒருமனதில் மற்றொன்று முதிக்காமல் பிரசாதத்திற்குள்ளாக்குவது.

(10) சிதானந்த மூலோதகம், அதிக பிரம்மஸ்தானம், ஆதார சுவாதிஷ்டானத்துக்குக் கொண்டுவந்து சுவாதிஷ்டானவனுகைதசக்கரத்துள்ளிட்டு, நாதசக்கரத்தை ரவிசக்கரத்துள்ளிட்டு ரவிசக்கரத்தை சசிசக்கரத்துள்ளிட்டு, சசிசக்கரத்தை மஹாலிங்க சக்கரத்துள்ளிட்டு சந்திர காந்த மென்னும் கும்பத்திற்குள் பரமாம்ருதவ, சாத்காம்கத பச்சிம யோகத்தினுல் கிரகிப்பவனுகியவனே சிதானந்த மூலோதகம்.

## (5) தானே சதாசிவம்.

சுலோஹம்.

தாசத்வம். வீரதாசத்வம், பிருத்யத்வம், வீரபிருத்யயோ: சஜ்ஜனத்வம் சகலாவஸ்த்யம். சமயாசார ஷட்விதம்.

இப்படிப்பட்டவர் பரிய சமயாசார அங்கம் கொண்டு அநுபவமிப்படி நான்கக்ஷரத்தை அந்தரங்கத்தில் நிருந்தினவரே. சர்வாங்கத ஒவ்வொரு ரோமத்திற்கும் ஒவ்வொரு கோடி லிங்கம். இன்னும் சர்வம் லிங்கமயமானதும், மனம் மக்னமாகும் மனம் மக்கினமானதும், மனப்பிரபஞ்சம் அடங்கும், அடங்கினுல் அம்மூர்த்தி தானே சதாசிவனென்று சொல்லப்பட்டிருக்கிறது, இன்னு மிவருக்கு

சுலோஹம்.

ஜபாநாந்த பணித்யானும் ஜபாம்ஞ மனவர்ஜ்ஜிதம்
மன: பூரேணசானந்தி சர்வலிங்காங்கதோமஹி.

இப் பிண்டத்திற்கு மனமே முக்கிய ராஜன், மனக்கிலே சத்தைச் சுட்டுமனம் நிர்மலமானுல் ஜபம் தபம் பிடிக்காதுகாணும் நந்தீஸ்வரா.

சுலோஹம்.

தேஹம் தேவாலயம் புரோக்தம் ஜீவோதேவஸ்சதாசிவ:
தேஜாதிக்ஞான நிர்மால்யம் சோஹம்பாவேனபூஜயேத் (61)

மனதைவர்ஜ்ஜித்தாலம் மூர்த்தியினுடைய தேஹமே தேவாலயம், பிராணனே சிவன் மற்றும் அத்தோஹமே கைலாசம் ஜீவனே பரமசிவன் அப் புருஷன் ரோமங்களெல்லாம் புண்ய க்ஷேத்திர லிங்கம் அப் புருஷன் அங்கமே வாரணுசி அப் புருஷன் தர்சனமே, மணிகர்ணிகா முதலான அஷ்டாசஷ்டி தீர்த்தம், சர்வசங்க பரித்யாகமே பிராணலிங்கம். பூசையின் நிர்மால்யம், சோஹம்பாவத்துடன் பிராணலிங்கத்தைப் பூஜிக்கவேண்டியது

சுலோகம்.

அங்குஷ்டாக்ரே அஷ்டசஷ்டி தீர்த்தன்யாஸ்மின் வசம்திதே
சப்த சாகர பாதோர்த்வே ததோர்த்வே குலபர்வதம் (62)

சப்த சாகர பர்யாந்தம், தீர்த்தஸ்னான பலம்யதா
குரோரம்க்ரி ஜலம்பிந்து சஹஸ்ராம்சன பூரயேத் (63)

குருபாதோதகம் அஷ்டா சஷ்டிகோடி தீர்த்தங்களை விட மேலானதென்று, மனதில் பாவித்துக் கொள்ளவேண்டியது. மனம் மக்கினமான பாததீர்த்தமே சர்வ தீர்த்தமும், பிரசாதமே கோடிலிங்கமும், நித்யம்பூஜிக்கும் மூர்த்தியே சாக்ஷாத் பரசிவனுமாம்., இன்னும் சஜ்ஜன சுத்த சிவாசார அங்கம் கொண்ட மஹாத்மருக்கு சாந்தமே விபூதி, சுசித்தமே ருத்ராக்ஷம், பஞ்சேந்திரிய விஷயமென்னும் சுகங்களைத் தண்டிப்பதான தண்டம், சந்திரகாந்தத்தினுடைய பரமாம்ருதமே, சேவிக்கும் கர்ப்பரம், பரதத்வ மல்லாதிருந்தால் க்ஷுதாநிவாரண பிக்ஷா, சீதநிவாரண கந்தெ, சுனக நிவாரண தண்டம், இன்னும்

சுலோகம்.

சாந்தேவ பஸ்ம முத்தூள்யம் சுசித்த மணிபூஷணம்
விஷயான் சிக்ஷிதே தண்டம், பரதத்வம்ச கர்ப்பரம். (64)

க்ஷுதாதண்ட யதாபிக்ஷா நகம்தா தேஹவஸ்த்ரயோ :
பஞ்சேந்த்ரி தண்டணீ தண்டம், மனமக்னந்து தச்சிவம் (65)

கார்த்தபம் மிருண்மயக்ஷாரோ பாண்டகோ மணிபூஷணம்
பங்குளம் ஹஸ்த காஷ்டேன தர்சனம் யமதர்சனம் (66)

பொன் பெண் மண்ணிற்காக வேஷதாரிகள் விபூதிதாரணம் செய்துக் கொண்டால்தானென்ன, கழுதை சாம்பலில் பிரண்டமாதிரியாயும், ருத்ராக்ஷம் தரித்தால்தானென்ன குயவன் பாத்திரத்திற்குத் தங்கஹாரம் போட்டமாதிரியாயும், தண்டம் பிடித்தால் தானென்ன, இவைகள் மனஹீன தர்சனையும் சோர தர்சனையேயொழிய சிவதர்சனமல்ல, இது யமதர்சன மென்று காணும் நந்தீஸ்வரா.

உ
நிஜகுருலிங்காய நம :

## (1) ஜாதக்கர்ம லிங்கதாரணை விதி.

அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

*சந்திரகாந்தத் தேனுந்தபனகாந்தத்திலேனுஞ்*
*சுந்தரசயிலந்தன்னிற்றோன்றிய சிலையிலேனும்*
*வந்துறுபடிகத்தேனு மகிழ்வாண லிங்கத்தேனு*
*முந்தழகுறுமி * லிங்கமொன்று கொள்கிற்கமன்னே.*

சந்திரகாந்தக் கல்லிலாயினும் (சந்திரனைக் கண்டால் நீரை யுமிழுங்கல்) சூரியகாந்தக்கல்லிலாயினும் (சூரியனைக் கண்டால் நெருப்பையுமிழுங்கல்) ஸ்ரீ சைலமலையிலுள்ள கல்லிலாயினும், அல்லது படிகக்கல்லிலாவதும், வாணலிங்கத்திலாயினும் (நர்மதா நதியிலுள்ள சிவலிங்கத்திலாயினும்) ஆக இவ்வைந்து கற்களிலே தாவதொருகல்லினால் செய்த சிவலிங்கத்தை வர வழைத்து
(இஃது சித்தாந்த சிகாமணி, 5-வது லிங்கதாரணத்தலம்)

சுருதி சுலோஹம்.

*வீரசைவஸ்திதானும்ச ஸ்திரீணும் கர்ப்பாஷ்டமே குரு :*
*பஞ்சசூத்ரக்ருதம்லிங்கம் தாரயேத் விதியவச்சுபம்*
*அர்த்தோதயேபாப்ய தஸ்யாத்பதனே சைவதேசிக :*
*பூர்வசம்ஸ்காரிதம் லிங்கம்சிரோ : கண்டேசதாரயேத்*

வீரசைவ ஸ்த்ரீகள் கர்ப்பமாயிருக்கும் எட்டாவது மாதத் திலேயே

சுருதி சுலோஹம்.

*லிங்க விருத்த சமம்பீடம், தீர்க்கம் விஸ்தார மேவச*
*ததர்த்தம் கோமுகம் சைவ பஞ்சத்சூர முதாஹ்ருதம்*

இம்மாதிரி பளவாகச் செய்து முடித்த லிங்கத்தை குருக்களினாலாவது. ஜங்கமய்யராலாவது சம்ஸ்காரம் செய்வித்து

---

* அத்யதிஷ்டத்த சாங்குல, நிருபம, நித்ய, நிராமய, நிர்க்குண நிரஞ்ஜன நிர்த்வந்திய, அவ்யக்த, அவ்யய பராத்பர, அத்விதிய பிரஹ்மம் என்னும் பதத்திற்கு வாச்சியமான பரவஸ்துவே இவ்விலிங்கமாகும்.

அவ்விலிங்கத்தை விதிப்பூர்வகமாகத் தாய்கழுத்தில் தரிக்கவேண்டியது. மற்றும். பிரசவகாலத்தில் அர்த்தபிண்டோதய காலத்திலாவது அல்லது பூமிக்கு வந்தபிறகாவது. முன் (8) ம் மாதம் சம்ஸ்காரம் செய்து தாய்கழுத்தில் கட்டியிருக்கும். அல்லது அவ்வீட்டு யஜமானன் அல்லது யஜமானியிடம் கொடுத்து வைத்திருந்தலிங்கத்தை சிசுவின் கழுத்தில் லிங்காதாரணை விதிப்படிதரிக்கவேண்டியது. இதுசாத்திய மில்லாம லிருந்தால் மூன்றும் நாளும் அல்லது (13)ம் நாள் வீடுமுழுவதும் சுத்தி செய்து மெழுகி கோலங்களிட்டு மாவிலைத் தோரணங்கள் கட்டியலங்கரித்து ஜங்கமய்யரால், (13)-ம் நாள் குழந்தைக்கு சிவலிங்கதாரணம் செய்விப்பதற்காக சிவபூஜாகிரகத்தை மெழுகி கோலமிட்டு தோரணங் கட்டி. குருபீடம் போட்டு எல்லா பூஜாசாமக்கிரியைகளையும் தயாரித்து. குருக்களை அல்லது ஜங்கமய்ய ரையழைத்து பீடத்தின் மேலாரோகணிக்கச்செய்து பாதார்ச்சனை செய்துக்கொண்டு தூள பாதோதகத்தை அவ் வீட்டின் எல்லாவிடங்களிலும் புரோக்ஷித்து தரிக்கத்தக்க பஞ்சசூத்திரத்து லிங்கத்தின் மேலேயும் புரோக்ஷித்து (தெளித்து) அவ் விலிங்கத்தின் பீடம் அசையாமல்படிக்கு பத்திரமாக நூல் சுற்றி பீடத்தின் பேரில் வைத்துக்கொண்டிருக்கவேண்டியது. பிறகு ஆசார்யன் வலது புரம் கீழே அரிசியை மந்திரப் பூர்வகமாகப் பரப்பி ஒரு சிவகலசம் மந்தி ரோக்தமாக பிரதிஷ்டைசெய்து அக்கலசத்திற்கும் சூதகாக்கிரகத்தில் சிசுவுஉள்ள ஸ்தானத்திற்கும் சூஸ்திரத்தைக் கட்டி அக்கலசத்தில் சிவனை ஆவாஹனம் செய்ய

## (2) சிவ ஆவாஹன மந்திரம்.

வ்யோமவ், யோமாய வித்மஹே சூட்ம சூட்மாய தீ மஹி தந்நோ சிவ : பிரசோதயாத்

என்று ஆவாஹனம் செய்து உபசார பூஜைகளெல்லாம் மந்திர பூர்வகமாகச்செய்து, கலசத்தின்மேல் ஹஸ்தம் வைத்து 108 தடவை பஞ்சாக்ஷரி மந்திரத்தை ஜெபித்துப்பிறகு அவ்வீட்டின் யஜமானனாவது அல்லது இதரராவது ஆசார்யனுக்கு சாஸ்டங்க நமஸ்காரம் செய்து ஆசார்யன் அருகில் உட்கார்ந்துக் கொண்டு

## (3) சிசு தந்தையின், சங்கல்பம்.

தேசகாலாதிகளைச் சொல்லிப் பிறகு

ஏவம் குணவி சேஷணவிசிஷ்டாயா மாபா புண்ய சுப முஹூர்த்தேன அஸ்யாம் சுபதி தௌ, மமதர்ம பத்தினியாம் ஜாதஸ்ய குமாரஸ்ய ஆயுஷ்யாபி விர்த்யர்த்தம், (  ) கோத்ரோத்பன்னஸ்ய சிசோர்ப்பவித்வதோஷாபநோதனத்வாரா, லிங்காங்கித்வசித்யர்த்தம் ஜாதக் கர்மாக்யம் கர்மகரிஷ்ய, மாணஸ்ததங்க நாந்தி சோபன தேவதாப்ரீத் யர்த்தம். நாந்தி சமாரதாணக்யம் கர்ம கரிஷ்யமாண ஸ்ததாதௌ சுத்தியர்த்தம் விருத்யர்தம் அப்யுதயார்த்தம்சமாஹேஸ்வரைஸ்ச :, ஸ்வஸ்தி புண்யாவா, சனம் கரிஷ்யே

என்றவ்வீட்டின் யஜமானனாவது அல்லது சிசுவின் தந்தையாவது அல்லது இதரராவது இச்சங்கல்பம் சொல்லி கீழே யபிஷேக பாத்திரத்தை வைத்து தாரணம் செய்யத்தக்க சிவலிங்கத்தை இடது ஹஸ்தத்தில் வைத்து மந்த்ரோக்தமாக பஞ்சாமிர்தாபிஷேகம் செய்து விபூதி சந்தனம் புஷ்ப முதலானவைகள் மந்திரப்பூர்வகமாகத் தரிப்பித்து சிவலிங்கத்தை ஜலாதிவாசம் செய்விக்கவும்

## (4) ஜலாதிவாச சங்கல்பம்.

தேசகாலாதிகளைச் சொல்லி

ஏவம் குணவிசேஷண விசிஷ்டாயாமாபா புண்யசுபமுஹூர்த்தேன அஸ்யாம் சுபதிதௌ லிங்கஸ்ய கர்ஷணாதி தோஷ நிவிர்த்யர்த்தம் ஜலாதி வாசம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி ஒரு பாத்திரத்தில் கங்கா ஜலமும் பஞ்சகவ்யமும் விபூதியும் போட்டு அதில் சிவலிங்கத்தைதை யிரண்டு தர்ப்பைகளுடன் சேர்த்திரண்டு வஸ்திரம் சுற்றி பாத்திரத்தில் வைத்து இடக்கையினலைப் பாத்திரத்தைப் பிடித்து, 108 தடவை ஓம் நமசிவாய : வென்னும் சடாக்ஷரி மந்திரத்தை ஜபித்து சிவலிங்கத்தைப் பாத்திரத்திலிருந்தெடுத்து வஸ்திரத்தை யவிழ்த்து சுத்தோதகாபிஷேகம் செய்து பஞ்சோபசாரத்தால் பூஜித்துப் பிறகு

## (5) தான்யாதிவாச சங்கல்பம்.

ஏவம்குணவிசேஷணவிஸிஷ்டாயாமாபாபுண்யசுபமுஹூர்த்தேன, அஸ்யாம் சுபதிதௌ சிவலிங்கஸ்ய தேவதாபீஜத்வ சித்யர்த்தம், தான்யாதி வாசம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி சிவகலசத்தின் ஈசான்யதிக்கில் பூமியைச் சுத்திசெய்து அஷ்டதளகமலக் கோலமிட்டு அதின் பேரில் அரிசிநிரைத்த பாத்திரத்தை வைத்து சிவலிங்கத்தை (2) தர்ப்பை, (2) வஸ்திரத்தால் சுற்றி கிழக்கு திக்கில் லிங்கத்தின் சிரசு இருக்கும் படியாகவும் கோமுகம் அதோ (கீழ்) முகமாயிருக்கும்படியாகவும் அரிசியில் வைக்கவும்

மந்திரம்

தத்புருஷாய வித்மஹே மஹாதேவாயதீமஹி
தந்நோருத்ர: பிரசோதயாத்

என்றிம் மந்திரித்தை உச்சரித்து தானியபாத்திரத்தில் படுக்கவைத்து அதை இடது கையில் பிடித்து பிராணாயாமம் செய்து (100) அல்லது (108) தடவை சிவபஞ்சாக்ஷரி மந்திரத்தால் மந்திரித்துப் பிறகு அச்சயன ஸ்தானத்திலுள்ள சிவலிங்கத்தை யெடுத்து மதுவர்க்க அபிஷேகமாவது பஞ்சாமிர்த அபிஷேகங்களாலாவது தனித்தனியாகச்செய்து

பஞ்சப்பிரம்மமந்திரங்களினால் சுத்த ஜலாபிஷேகம்செய்து விபூதி சந்தன முதலான பஞ்சோபசாரமாவது, அஷ்டோபசாரமாவது லிங்கார்ச்சனை விதியில் சொன்ன மந்திரப்பூர்வகமாகப் பூஜிக்கவேண்டியது.

ஆரம்ப முதல் முடிவுவரை ஐந்து தடவை அபிஷேகாதி பூஜைகள் செய்யவேண்டியது, பிறகு

## (6) லிங்க பிராணப் பிரதிஷ்டை.

ஓம் அஸ்யஸ்ரீ சிவலிங்க பிராணப்பிரதிஷ்டாபன மந்த்ரஸ்ய பிரஹ்மருஷி: தேவீகாயத்ரீசந்த: ஓம் பீஜம் ஹ்ரீம்சக்தி: க்ரௌம் கீலகம் சிவலிங்க பிராணப்பிரதிஷ்டார்த்தம்ஜபே வினி ஓம் ஹ்ரீம் க்ரவும் யம்ரம் லம்வம் சம்ஷம் ஸம் ஹம்ச: [யோக: அமுஷ்ய பிராண இஹஸ்தித: அமுஷ்ய ஜீவ இஹஸ்தித: அமுஷ்ய சர்வேந்த்ரியாணி காயவாங்மனஸ் சக்ஷுஶ்ரோ

சுரோத்ர ஜிம்ஹுஹா க்ராண பிராண இஹைவாகத்ய சுகம் சிரம் திஷ்டந்து சுவா : இதிலிங்கப் பிராணப்பிரதிஷ்டாபனம் குர்யாத்

என்று லிங்கத்திற்கு பிராணப்பிரதிஷ்டை செய்தபிறகு

## (7) தியானம்.

ரக்தாம்போதிஸ்த பூதோல்ல சதருண சரோஜாதி ரூடாகர ப்ஜை : || பாசம் கோதண்டமிஷ்சோத்பவமளிகுண மப்யம் குசம் பஞ்சபாணான் || பிப்ராணாஸ்ருக்க பாலந்த்ரீணயன விலசத்பீன வக்ஷோரு ஹாட்யா || தேவீபாலார்க்க வர்ணபவது சுககரீப்ராண : சக்தி : பரான :

என்று தியானித்து புது வஸ்திரத்தைத் தான் முகக்கிட்டுக் (முக்காடுபோட்டுக்) கொண்டு

மந்திரம்

ஓம் அமுஷ்பபிராண இஹப்ராண : ஸ்சோஹம் ஸ்சோஹம்

என்றுச்சொல்லி பாதத்திலிருந்து நாபி பர்யந்தம் பிரஹ்ம பாகத்தையும்.

ஓம் அமுஷ்யஜீவ இஹஸ்தித : ஸ்சோஹம் ஸ்சோஹம்

என்றுச்சொல்லி நாபியிலிருந்து ஹிருதயம்வரையில் விஷ்ணு பாகத்தையும்.

ஓம் அமுஷ்ய சர்வேந்த்ரியாணி வாங்மனஸ்சக்ஷு : ஸ்ரோத்ர ஜிஹ்வா கிராண இஹைவாகத்யசுகம் சிரந்திஷ்டந்து ஸ்வா :

என்றுச் சொல்லி இருதயத்திலிருந்து மஸ்தக பர்யந்தம் ருத்திரபாகத்திலும் நியாசம், ஸ்பர்சனம் செய்துப் பிறகு

## (8) பிராணேந்திரியப் பிரதிஷ்டை.

ஓம் அம்ஹிரீம்க்ரோம் அமுஷ்ய பிராண இஹப்ராண : சோஹம் சோஹம் || ஓம் ஆம் ஹிரீம்க்ரோம் அமுஷ்ய ஜீவ இஹஸ்தித : சோஹம் சோஹம் || ஓம் அம் ஹிரீம் க்ரோம் ஓம் அமுஷ்ப சர்வேந்திரியாணி சோஹம் சோஹம் || ஓம் அம் ஹிரீம் க்ரோம் வாங்மனஸ்சக்ஷு : ஸ்ரோத்ர ஜிஹ்வா க்ராண பிராணோ பானவ் யானோதான சமானகை கூர்மக்ருகர தேவதத்தனஞ்ஜயாதி தசபிராண இஹாகத்யா கத்ய ஆகச்சாகச்ச ஆகர்ஷயாகர்ஷயாசுகம் சிரம்திஷ்டந்து ஸ்வா: அம்ஹிரீம்க்ரோம் டம் ட்டம் டம் ட்டம் உம் வாக்பாணிபாத

பாயூபஸ்தாத்மனே ஓம் அம்ஹ்ரீம்க்ரோம் ஐம்தம்த்தம் த்தம் நம் த்வக் சக்ஷு: ஸ்ரோத்ர ஜிஹ்வாக் ராணாத் மனெ
ஓம் அம் ஹ்ரீம்க்ரோம் ஓம் பம் ப்பம் பம் ப்பம் மம் ஔம் மனோபுத்யஹங் காரசித்த விக்ஞா நாத் மனெ
ஓம்அம்ஹ்ரீம்க்ரோம்யம் ரம் லம் வம் சம் ஸம் ஷம் ஹம் ளம் க்ஷம் வசனாதானகமன விசர்ஜ்ஜனனந் தாத்மனெ
அமுஷ்யபிராண இஹபிராண அமுஷ்யஜீவ இஹஸ்தித :
அமுஷ்ய சர்வேந்திரியாணி காயவாங் மனஸ் சக்ஷு ஸ்ரோத்ர ஜிஹ்வாக்ராண வாக்பாணிவாத பாயூபஸ்த்தாஸ் ருக்மேதோஸ்தி மச்சாசுக்ல மனோபுத்யஹங்கார சித்தானி இஹாம் ருத லிங்கமத்யே சமாவிஸ்வ சுகம் சிரம் திஷ்டந்து ஸ்வா

என்றுச்சொல்லி பிராணேந்திரியப் பிரதிஷ்டாபனஞ் செய்த்பிறகு

## (9) பிராத்தனம்.

அசுநீதெ புனரஸ்மாசு சக்ஷு : புன : பிராண மிஹநோ தேஹிபோகம், ஜ்யோக் பஸ்யேமசூர்ய முச்சரந்த மநுமதெம் ருடயாநஸ்வஸ்த்தி, அம்க்ரீம் க்ரோம் ஓம் மஹாபத்ம வனும்த ஸ்தகாரண நந்தவிக்ரஹெ
சர்வபூத ஹிதெமாதெவஹ்யஹி பரமேஸ்வரி
ஓம் அம் ஹ்ரீம் க்ரோம் ஆவாஹி தோபவ ஆசினோபவ
அவகுண்டிதோபவ ப்ரசிதோபவ சுப்ரசன்னோ பவ
அஸ்மின் அமிர்தலிங்க மூர்த்தி மத்யே மஹாதேவம் பிரசன்னம் குருகுருஸ்வா : ஹம் ஸ்லாம் ஹம் ஸ்லீம் ஹம் ஸ்லூம் ஹம்ஸ்லைம் ஹம்ஸ்லௌம் ஹம்ஸ்ல : ஆகச்சாதித்ய மத்யஸ்த பார்வதீ சஹித பிரபோ அஸ்மின் பிம்பே ப்ரதிதினம் சன்னிதிர்ப்பவ சங்கரா

என்று பிராத்தனைச் செய்து அர்க்யன பாத்யாசம ங்களைக் குடுத்து முக்காடு போட்ட வஸ்திரத்தை யெடுத்துவிட்டு

## (10) பஞ்சப் பிரஹ்ம நியாசம்.

ஓம் ஹராம் நம் சத்யோஜாதாய நம : என்று பாதத்திலும்
ஓம் ஹ்ரீம் மம் வாமதேவாய நம : என்று குஹ்யஸ்தானத்திலும்
ஓம் ஹ்ரூம் சிம் அகோராய நம : என்றிருதயத்திலும்
ஓம் ஹ்ரைம் வாம்தத்புருஷாய நம : என்று முகத்திலும்
ஓம் ஹரௌம் யம் ஈசானாய நம : என்று சிரசிலும்

இப்படியாக பஞ்சப் பிரஹ்மநியாசம் செய்து பிறகு ஓம் சாம்பசதா சிவாய நம : "என்னும் நாமமந்திரத்தால் பஞ்சோப சார பூஜை செய்து, ஓம் நிதனபதயே நம : " என்று சிவலிங்கத்

தை யெடுத்து வாமஹஸ்தத்தில் (இடக் கையில்) வைத்து பூர்வத்தில் பூசித்த கலசோதகத்தை (கலச தீர்த்தத்தை) ஸ்தாபன கலசாபிஷேக மந்திரத்தாலாவது ருத்ரசூக்த மந்திரத்தாலாவது புருஷசூக்த மந்திரத்தாலாவது அபிஷேகித்த பிறகு

சரணம் பவித்ரம் விததம் புராணம் புராணம் யேனபூதஸ்தாதி
துஷ்க்ருதானி தேன பவித்ரேண சுத்தேன பூதா :
அதிபாப்மான மராதிம் தரேம

என அபிஷேகம் செய்து சோடசோபசாரத்துடன் பூஜித்துப் பிறகு

## (11) குருபாதோதகாபிஷேக மந்திரம்.

யஸ் யஸ் மிருத்யாச நபோக்தியா தப : பூஜாக்ரியாதி ஷு
ந்யூனம் சம்பூர்ண தாம்யாதி சத்யோ வந்தே சதாசிவம்
மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் மஹேஸ்வர
யத்பூஜிதம் மயாதேவ பரிபூர்ணம் ததஸ்துமெ
அனயாத்யாநாதி சோடசோபசார பூஜயாபகவான் சர்வாத்மக
ஸ்ரீ சாம்ப சதாசிவ சுப்ரீத சுப்ரசன்னோ வரதோபவது

என்றுச் சொல்லி அக்ஷதையும் ஹிரண்ய மென்னும் தங்கமும் ஜலமும் சேர்த்து அபிஷேகஞ் செய்து பிறகு சிவலிங்கத்தை பட்டு வஸ்திர மல்லது மடிவஸ்திரத்தில் சுற்றிக்கட்டின பிறகு அச்சிசுவுக்குமுன் சுற்றினசூஸ்திரத்தை விடாமலெடுத்துக் கொண்டுவந்து குருவின் சமீபத்திலுட்கார்ந்து

## (12) காயத்ரீ மந்திரம். (1)

ஓம் பூர்புவ : ஸ்வ : தத்ச விதுர்வரேண்யம் பர்க்கோ
தேவஸ்யதீமஹி தியோயோந : ப்ரசோதயாத்.

என்று சொல்லியச் சிசுவுக்குக் குருபாதோதகம் பஞ்சகவ்யங்களை மூன்று தரம் புரோக்ஷித்து (தெளித்து) பிறகு

## சிசுவுக்கு பஸ்மதாரண மந்திரம். (2)

திரயம்பகம் யஜாமஹெ சுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருக மிவபந்தநான் மிருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்
ஓம் சிவாய நம: விபூதிம் தாரயாமி,

என்று சிசுவின் நெற்றியில் விபூதி தரித்து அச் சிசுவி னிரண்டு செவிகளிலும் மஹா மந்திர மாகிய பஞ்சாக்ஷர மந்திர முபதேசித்துப் பிறகு சிசுவின் கண்டத்தில்

### லிங்கதாரண மந்திரம் (3)

ஓம் லிங்கதாரணம் த்ரயோ வேதா : சிவலிங்கம் தாரயந்தி
தஸ்மாத்தேவா சிவலிங்கம் தாரயந்தி
யோவை லிங்கதாரணம் குர்யாத் நமல்க சோபவந்தி
நஸ்வச சோபவதி சுகாத்பலிங்க தாரயந்தி சோர்க்க
ருதாலிங்க தாரயந்தி ருஷயஹ சிவலிங்கம் தாரயந்தி
அஜஹரிமுகா சிவலிங்கம் தாரயந்தி சுரோந்த்ரா :
தைத்யா : சிவலிங்கம் தாரயந்தி தஸ்மாத்தேவாசிவலிங்கம்
ஓம் நமோ பிரஹ்மணே லிங்கதாரணம்வே அஸ்மின்
நிராகரணெ தாரயேதா பூபாஸ் சம்கர்ண யோஸ்ருதம்
மாச்சோர்த்வம் மமாயுஷ்யம் இத்யனேன மந்த்ரேண
சிரோ கண்டே சிவலிங்கம் தாரயேத் :

இம் மந்திரப்பூர்வகமாக சிசுவின் கண்டத்தில் சிவலிங்க தாரணம் செய்த பிறகு

### யக்ஞோபவீத மந்திரம் (4)

யக்ஞோப வீதம் பரமம் பவித்ரம் பிரஜாபதெர்யத் சஹஜம் புரஸ்தாத்
ஆயுஷ்ய மக்ரச ஹ்யம் பிரதிமும்சுப்ரம் யக்ஞோப வீதம் பலமஸ்துதேஜ :

என்று சொல்லி யக்ஞோப வீதம் (சிவலிங்கம்) தரித்த பிறகு

### (13) சிசுவுக்கு ஆசீர்வாத மந்திரம்

நமோ நமோ பவதிஜாயமனோம் தம்கேதுருஷசாமேத்யக்ரேபாகம்
தேவேப்யோ விதத்யாயன்ப்ர சந்த்ரமா : ஸ்திரதரதீர்க்க மாயு :
இதிவேத வாக்யெ நாசீர்வாதம் தத்யாத்

என்று ஆசீர்வாதம் செய்த பிறகு அந்த குருவினாலேயே சிசுவுக்கு நாமகரணம் செய்வித்துப் பிறகு பாதபூஜா விதியில் சொன்னபிரகாரம் குருபாதபூஜைசெய்து அச்சிசுவுக்கு பாதோதகம் கொடுத்து அனைவரும் பாத தீர்த்தம் வாங்கிக்கொண்ட பிறகு, சிசு தந்தையானவர் நெய் தேன் ஒருபாத்திரத்தில் கலந்தெடுத்து வந்து தாயின் துடையின்பேரில் கிழக்கு முகமாகப் படுக்கவைத்திருக்கும் சிசுவின் மஸ்தகத்தைப் பிடித்து.

## (14) நெய் தேன் மந்திரம். (1)

மேதாந்தே தேவஸ்சவிதா மேதாம் தேவி சரஸ்வதி
மேதாம்தெ அஸ்விநௌ தேவ வாதத்தாம் புஷ்கரஸ்ரஜாத்
த்வயிமே தாம்த்வயி ப்ரஜாத்வை யக் நிஷ்தேஜோ ததாது
த்வயிமேதாம் த்வயிப்ரஜாம் த்வயிசூர்யோ பாஜோ கதாது

என்று சொல்லி சிசுவின் வாயில் நெய் தேனை கொஞ்சம் விரலால் தொட்டு வைத்துப் பிறகு இத்தேன் நெய்யை தர்ப்பையினால் தொட்டு

## ஸ்தன மந்திரம். (2)

சசிரா ஜாதவேதா: அக்ஷரம்பரமம்பதம் தேவனுகாம் சிரக்ஷத்தமம்
ஜாதவேதசெ சிரசி மாதவெ பிரஹ்ம பூர்ப்பு வஸ்வரோம்

என்று தன் பத்தினியின் வலது ஸ்தனத்தில் தடவி :

## (15) ஸ்தனப் பிராசனமந்திரம்.

அயம்குமாரோ ஜராம்தயத் தீர்க்கமாயு :
யஸ்மைத் வகாம் ஸ்தன ப்ரப்யாயா யுர்வர்ச்சோயசோபலம்

என்றுசொல்லி சிசுவுக்கு முதலில் வலது ஸ்தனத்தை குடிப்பித்துப் பிறகு லிங்க தாரணம் செய்த வரும் (5) பேர் சிவலிங்க தாரணமுள்ள மாங்கல்ய ஸ்ரீகளுக்கும் முன்னமே அமுது சொல்லிவந்து பிரசவித்தவளாவது அல்லது அவ்வீட்டில் யாராவது மேற்படி மாங்கல்ய ஸ்த்ரீகளில் ஒருவருக்குப் பூசித்துப் பிரசவித்த தாய்குழந்தையுடன் நமஸ்கரித்து அவராலாசீர்வாதம் பெற்று எணைகட்டி ஏணைபூசை போட்டு குழந்தையை எணையில் படுக்கவைத்துவிட்டு எல்லோர்க்கும் அமுதளித்து தக்ஷணை தாம்பூலம் கொடுத்தனுப்பவேண்டியது. அவர்கள் ஆசீர்வாதத்தால் ரோகமற்று சுகஜீவிகளாக வாழ ஏதுவாகிறது எவ்வித முகாந்தரங்களைக் கொண்டும் குழந்தையின் கண்டத்தி (கழுத்தி) லுள்ள சிவலிங்கத்தை யப்புறப்படுத்தி வைக்கலாகாது. பிறகு ஒரு வருஷத்தில் முடியிறக்குவதும் 3 அல்லது 5 வருஷத்தில் ஜடைபிரிப்பதும் என்று சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. பிறகு 8வது வயதில் தீக்ஷை செய்விப்பது உத்தம மென்றும், 12, வயதில் செய்விப்பது மத்திம மென்றும், 16. வயதில் செய்விப்பது கௌணம் அல்லது அதம மெனவும் மற்றும் தீக்ஷை செய்யாமல் விவாஹம் செய்யக்கூடாதென்பது சாஸ்திரோக்தமாகயால் ஆண் பெண் சகல குழந்தைகளுக்கும், 12, வயதில் ஜங்கமய்யராலாவது பட்டாதிகாரியாலாவது ஆசார்யனாலாவது தீக்ஷை செய்வித்த பிறகே விவாஹம் செய்யவேண்டியது,

(முற்றிற்று) இஃது சுயம் புரோஹிதம்.

# ஜங்கம ரென்பது யார்?

—o—

ஜகத்தாதியில் சக்திவிசிஷ்டாத்வைதாத்மகமான வீரசைவ(லிங்காயுத) மதத்தை பரமபூஜியர்களாயுள்ள ஸ்ரீமத்ஜகத்குருக்களான பஞ்சாசார்யர்கள் ஸ்தாபித்திருப்பதல்லாமல் இவர்கள் வியாசர், அகஸ்தியர், சானந்தர், தூர்வாசர், ததீசி முதலான மஹரிஷிகளுக்கும் உபதேசம் செய்திருப்பதுமல்லாமல் இப்பரதகண்டத்திலுள்ள அநேக மஹாராஜர்களையும் தங்களுடையசிஷ்யர்களாகச் செய்துக்கொண்டு அவர்களா லனேகானேக தானசாசனங்களையும் மற்றும் வர்ஷாசன (வருட) காணிக்கைகளையும் பெற்றிருப்பதும் தவிர இப்பரத கண்டத்தில் சர்வதோ முகமாக வியாபித்துள்ள வீரசைவ மதத்தின் ரக்ஷணை சிக்ஷணைகளுக்காக பிரதியொரு கிராமங்களிலும்கூட கிளை மடங்களையும்ஸ்தாபனம்செய்திருக்கிறார்கள், இம்மடாதிபதிகளான சரமூர்த்திகளே ஜங்கமர்களென உலங்ககளிலும் சாஸ்திரங்களிலும் பிரசித்தர்களாக யிருந்திருக்கிறார்கள், இம்மஹான்களுடைய தபோ பிரபாவத்தினால் வீரசைவ(லிங்காயுத)மதமானது உலகில் பெருபூஜியமதமெனச் சிறந்து விளங்கி வருகிறது, இச்சங்கம மூர்த்திகளின் அபாரமான மஹிமையைத்தெரிந்து பரதகண்டத்தை ஏகசக்கிராதிபதியாக அரசாண்ட அனேகானேக ஹிந்து மஹாராஜாக்களிலொருவரான ஜயனந்ததேவ னென்னும் நரேசன், விக்ரம வருடம் (63) கார்த்திகை சுத்ததேவஸ்தான ஏகாதசி நாள் ஜங்கமபுரமென்னும் கிராமத்தை ஸ்ரீ காசி (பனாரஸ்) விஸ்வரா ராத்திய பீட (ஜங்கமவாடிமட)த்தினுடைய கோவுகளின் பரிபாலனத்திற்காக எழுதிக்கொடுத்துள்ள தாம்பிர சாசனமானது இன்றைக்குச் சுமார் 1355 வருடங்களாகின்றன. மற்றுமிப்படியே ஹிந்து மஹாராஜர்களுடைய தான சாசனங்களனேகமாயிருப்பதுமல்லாமல்மற்றும் பாபர், அக்பர், ஜஹாங்கிர், உமாயூன் முதலான மொகலாய சக்கிரவர்த்திகளின் தானசாசனங்கள், 20 வரையில், தற்போதும் மடத்திலிருந்து வருகிறது. ஹிந்து தர்மத்தின் பரம வைரியான ஔரங்கஜேப் என்பவன் இக்காசி பீடத்தை நாசம் செய்யும் உத்தேசத்துடன் படையெடுத்து வந்தபோது இக்காசி பீடாதிபதியான ஸ்ரீ, ஜகத் குரு மல்லிகார்ஜ்ஜுன சுவாமிகளென்பவர் விசேஷமஹிமைகளைக் காட்டியதால் ஔரங்கஜேபினுடைய கர்வமடங்கி பிராயச்சித்தம் செய்துக்கொண்டு அரபி பாஷையில் ஒரு தானசாசனமெழுதிக்கொடுத்திருக்கிறான். மற்றுமிக்காசி பீடத்தின் கிளைமடமானது நேபாள ராஜ்யத்தில் பாககாம் என்னும் கிராமத்திலிருந்து வருகிறது. இச்ஜங்கமவாடி மடத்திற்கு நேபாள மஹாராஜனாக பூருவத்திலிருந்த விஸ்வமல்ல நிருபதியானவன் தன் பத்தினி, கங்காதேவியுடனும் தனது குமாரர்களான திரிலோ

கமல்லன், திரிபுவனமல்ல னென்னுமிரு புத்திரர்களுடனும் கூடி விக்ரம, வருடம் (692) கிறிஸ்து சகாப்தம் 639-வது ஜேஷ்டசுத்த அஷ்டமியில் தேவநாகர பாஷையில் சிலஜமீன்(பூமி)களை இம் மடத்தின் பரிபாலனத்திற்காகக் கொடுத்து எழுதிக்கொடுத்த தாம்பிர சாசனமானது இன்றைக்குச் சுமார் 1296 வருடங்களாகின்றது. மற்றும், ஹிமோத்கேதார பீடமானது துவாபர யுகத்திலிருந்த தென்பதற்கு அநேக அத்தாக்ஷிகளிருக்கின்றன, இப்பீடத்திற்கு ஹிமாலய டிஹரி ராஜ்ய மஹாராஜர், உதயபுரம் ஜம்பு, காஷ்மீர் மஹாராஜா முதலான 11, அரசர்கள் சிஷ்யர்களாயிருந்து அநேக தான சாசனங்களும் வருஷகாணிக்கைகளும் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். மற்றுமிப் பீடத்தின் கௌரவத்தைக்கண்டு பொறாமைகொண்ட சில ஸ்மார்த்தர்கள் இப்பீடத்தைத் தங்கள் சுவாதீனம் செய்துக்கொள்ளவேண்டுமென்னும் துராலோசனையினாலிப்பீடமானது வீரசைவர்களதல்லவென்றும் சங்கராசாரியரால் ஸ்தாபிக்கப்பட்டதெனவும் கோர்ட்டில் வழக்குத் தொடுத்துவெகு காலமாக வழக்கு நடைபெற்று கடைசியாக அலகாபாத் கோர்ட்டில் இப்பீட (சிம்ஹாசன) மானது சங்கராசாரியருக்கு முன்னால் எவ்வளவோ காலமாக புராதீனமாயிருந்திருக்கிறதென்றும் இது ஜங்கமர்களுக்குச் சேர்ந்ததெனவும் தீர்மானமாயிருக்கிறது.

மற்றுமிப் பஞ்ச மூலாசார்யர்களிலொருவரான ஸ்ரீ ரேவண சித்த சிவாசார்யர் ஆதிசங்கராசார்யருக்கு சந்திரமௌளீஸ்வர லிங்கத்தையனுக்கிரகித்திருக்கிறார், இப்பெட்டக லிங்கமானது சிருங்கேரி ஆதி சங்கராசார்யருடைய பரம்பரை பீடாதிகாரிகளால் தற்காலமும் நித்திய பூஜை நடைபெற்று வருகின்றது. மற்றும் பூர்வ காலத்தில் லங்காதிபதியாயிருந்த விபீஷணனுடைய பிரார்த்தனானுசாரமாக லங்காபட்டணத்திற்கு விஜயம்செய்து மூன்று கோடி குரு ரூபத்தைத் தரித்து மூன்று கோடி சிவலிங்கப் பிரதிஷ்டை ஒரு முகூர்த்தத்தில் செய்து முடித்தார். மற்று மிச்சிவாசார்யருக்கு உஜ்ஜயனி பட்டணத்து பிஜ்ஜளராஜன் முதலான அரசர்களும் சிஷ்யர்களாயிருந்து அநேக தானசாசனங்களும் காணிக்கைகளும் கொடுத்திருக்கிறார்கள்.

மற்றும் பூர்வத்தில் காஞ்சீ நகரத்திற் கதிபனாயிருந்த சோள பூபாலனென்றுமரசன் காஞ்சீ நகரத்துள் விஷ்ணுவை ஸ்தாபிக்க வேண்டுமென்பதாக ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோவிலை ஏராளமான பொருட்செலவினால் கட்டி முடித்து விக்கிரஹ பிரதிஷ்டை செய்யவும் அது சிவனுக்கெதிராக நிலை பெறாமலிருந்தபடியால் அவ்வரசன் அநேகர்களைக்கொண்டு அஷ்டபந்தனங்கள் செய்துப்பார்த்தும் நிலைபெறாமல் அவ்விக்கிரஹம் சலித்து (அசைந்து)க்கொண்டி

ருப்பது கண்டு அரசன் மிகதுக்காக்கிராந்தனுகி ஸ்ரீ ரேவண சித்த சிவாசார்யரையணுகி அவரிடம் பிரார்த்திக்கவும். இச்சிவாசார்யர் அவ்விடம்போய் அவ்வரதராஜ விக்கிரகத்தின் மஸ்தகத்தைத் தம் ஹஸ்தங்களால் பிடித்து நிறுத்தவும் அதுஸ்திரமாக நிலைபெற்றது, பிறகு ஸ்ரீ ஏகாம்பரநாதர்சன்னிதியின் முன்பாகபூமியைப்பார்சித்து பூகர்ப்பத்திலிருந்து ஜனித்த ஸ்ரீருத்திரமுனீஸ்வரசிவாசார்யரை தமதுபீடத்திற்கழைத்துப்போய்தாம அவருக்குப்பட்டாபிஷேகம் செய்வித்து தம்முடைய உத்திராதிகாரத்தையவருக்கீந்து தாமுற் பவித்த ஸ்ரீகொல்லிபாகி சோமநாதலிங்கத்திலந்தர்த்தானமானுர். இவ்விஷயங்கள் அநேக கிரந்தங்களிலும் உருவச்சிலைகளாலும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன.

இப்படியாக இப்பரதகண்டத்து மஹாராஜர் முதலாக அநேக அரசர்களும் கூட குருவுக்குத் தனுவை(சரீரத்தை)யும் லிங்கத்திற்கு மனதையும், ஜங்கமத்திற்கு தனத்தையும் அற்பிக்கவேண்டு மென்னும் கிரந்தவசனத்தைப்போலவே அனேகவிதங்களான தானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள்கொடுத்த ஜமீன் (பூமி) கள்நாளது வரைக்குமிவர்கள் சுவாதீனத்திலேயேயிருந்து வருகிறது. இவ்விஷயத்திலிப்படிப்பட்ட குரு மடங்களே சாக்ஷிகளாயிருக்கின்றன, இவ்விதிப்படியிருக்க ஜங்கமஸ்வரூபத்தையறியாத வேடதாரிகளான சன்னியாசிகளிற் சிலர் தாங்களே ஜங்கமர்களெனவும் சொல்லிக் கொண்டு ஜனங்களை ஏமாற்றிக்கொண்டு வருவதைப் பார்த்தால் சூரியனைவிட்டு ஜக (பிரபஞ்ச)த்தின் இருளைப்போக்குவேனென ஜம்பமாகத்திரியும் மின்மினிப்பூச்சிகளைப்போலிவர்கள் இவ்வுலகில் கேலிக்காரர்களாகிறார்களேயொழிய வேறில்லை. மற்றும் வீரசைவ மதகிரந்தத்தில்.

சரமூர்த்திம் விநுதேவி அன்யோனைவஹி ஜங்கம:
சரமூர்த்தி யபிதானேன ஜங்கம: கதிதாத்ருவம்
அன்யதாயச்ச ஜாநுதி ரௌரவம் நரகம பிரசேத்

எனச் சொல்லப்பட்டிருக்கின்றன, ஓ, பார்வதியே சரமூர்த் தியே ஜங்கமனுயிருக்கிறான், வேறொருவ றென்றைக்குமாவதில்லை, இச்சரமூர்த்தியை அன்னியனெனப்பாவித்தால் ரௌரவ நரகத்தை யடைவானென உபதேசித்திருக்கிறார், இம்மாதிரியான தர்ம கிரந்தத்தின் உபதேசத்தை யறியாத மூட சன்யாசிகளானவர்கள் இனியாவதும் தம்முடைய வக்கிரமார்க்கத்தைவிட்டு ஜகதாசார்யர்களிடத்தில் ஒருவருமடையக்கூடாத பக்தியைவைத்து கைவல்லிய சுகத்தை யடையவேண்டுமெனக்கோருகிறோம்.

12-6-33 பஞ்சாசார்ய பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

# தத்துப் புத்ர ஸ்வீகார விதானம்.

———o———

வாதுளாகமத்தில் சிவபார்வதியின் சம்வாதத்தில் ஸ்ரீபார்வதி தேவி சங்கரனைக்குறித்து, ஹேபகவான், இதுவரைக்கும் உம்மால், மதபேதம் சைவபேதம், வீரசைவ பிரசம்சா ஜாதக்கர்மாதி சம்ஸ்காரம், அஷ்டாவர்ண லக்ஷணம் பஞ்சாசார ஷடுஸ்தலம் வீரவிரதம் லிங்கதாரண மஹாத்மியம் சிவார்ச்சனவிதி, மாஹேசதானப் ராசஸ்தயம் குலஸ்திரீகள் நடாவளி இத்யாதி யனேக விஷயங்களைச் சொன்னாலும்,, அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி,, என்பதா, கக்குழந்தை யில்லாதவருக்குக் கதியில்லை என்னும் வாக்கியத்தின் பரிகார உபாயம், சொல்லவில்லையே, என்று கேட்டதற்கு ஸ்ரீ சங்கரன், சொன்னதென்ன வென்றால், ஹேதேவி, பிராகிருத ஜீவர்கள் தேவருணம் ருஷிருணம் பித்ரு ருணம் என்னும் ருணத்ரயங்களினால் பத்தரா யிருக்கிறார்கள், அதற்காக யாகங்களை யாசரித்து, தேவதைகளினதும், தர்ப்பணத்தினால் பிதுர்க்களதும் ருஷிகளின், சிஷ்ருஷையால் ரிஷிகளதும், சந்தானோத்பத்தியினால் இம்மூன்று ருணங்களைத்தீர்க்க வேண்டியதாகின்றன. தவிர அப்ராகிருத, ஜீவர்கள் சரமசரீகளான, (கடைசி ஜென்மத்தவர்களான) வீரசைவ (லிங்காயுத)ருக்கு ருணத்ரயங்களில்லவே, யில்லை தேஹம் வர்ஜ்ஜித்த உடனே சாயுஜ்ய பதப் பிராப்தியாகிறது, இவர்கள் மோக்ஷத்திற்குக் குழந்தையில்லா திருப்பவருக்கு எவ்விதமான, நிர்ப்பந்தமும், உண்டாக்காது, இவர்களுக்கு ஈஸ்வரனே பித்ரு, சதாசிவனே பிதாமஹன், சிவனே பிரபிதாமஹன் ஆனதினால் பிதுருக்களைக் குறித்துச்செய்யும், சிரார்த்தாதி கர்மங்கள், சஹிதம் இவர்களுக்கில்லை. ஆனாலும் பிரதி வருஷம், ஈஸ்வர பிரீதிக்காக கணாராதனை மாத்திரம் ஆசரிக்கலாம், சந்ததியில்லாததினால் வம்சபாரம் பர்யமாக நடந்து வந்த குருஜங்கமரைப் போல, என் பூஜைகளும், நின்றுவிடு மென்னும். சமுசயமுள்ள பக்த மாஹேஸ்வரர் மாத்திரம் ஸ்வகோத்திரத்தில். நல்ல லக்ஷணயுக்தனான பாலகனை சம்க்ரஹித்து விதானோக்சமாய்ப் புத்திரனை, ஸ்வீகரித்ததினால், சம்சய பரிஹாரமாகிறது, என்று சொன்ன சிவன் வாக்கியத்தைக் கேட்டு சங்கரி மறுபடியும், கேட்டதாவது இந்தப்புத்திர ஸ்வீகாரவிதானம் எப்படி பாலகன் எத்தனை வயதுடையவனாயிருக்க வேண்டியது எம் மந்திரங்களைச் சொல்ல வேண்டியது, இவ்விஷயங்களைச் சொல்லவேண்டு மென்றுக் கேட்கவும், ஸ்ரீசிவன் சாத்தியமாகச் சொல்கிறார், இவ்விதானம், கீழே சொல்லியிருக்கிறது, இதைப் போலவே புத்ர ஸ்வீகார கர்மம் ஆசரிக்கத்தக்கது, வெகு ஜனங்கள் விதிவிதானங்களைத் தெரியாமலோ மற்றெந்தக்காரணத்தாலோ, மனதுக்கு வந்தமாதிரிச் செய்து, "யத்வாதத்வா" அல்லது (யத்பாவம் தத்பாவம்) (லிங்கவ

ம்சம்) வீரசைவ (லிங்காயுத) மதம் அவைதிகமென்னும், கெட்ட பிருதை அல்லது விரதத்தைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். அவைதிகமென்று சொன்ன மாத்திரமே, வேதாகம, உபநிஷத் இதிகாசங்களில் பிரசித்தமான, வீரசைவ மதம் அவைதிகமாக மாட்டாது, ஆனாலும். இக்கெட்ட பெயரினால், லௌகிக வியவஹார கார்யங்களில் விசேஷ தொந்தரவுகளுண்டாய்க்கொண்டிரு க்கும், ஆகையால் இனிமேலாவதும், ஸ்வயேச்சை ஆசாரம், செய்யாது, சாஸ்த்ரோத்தமான ஆசார நடவடிக்கைகளையே ஆசரிக் கத்தக்கது,

## தத்து ஸ்வீகார விதி,

தத்துப் புத்திரனை ஸ்வீகரிக்கும், யஜமானன், சிவபூஜாதி நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு சுபாசனத்திலமர்ந்து, ஆசமனம் பிராணாயாமங்களைச் செய்து, தேசகாலாதிகளைச் சொல்லி,

## (1) சங்கல்பம்.

ஏவம் குண விசேஷண விசிஷ்டாயாமஸ்யாம் சுபதிதௌ
அஸ்மாகம், சம்தத்ய விச்சேதன மதீய வம்சே, கரிஷ்யமாண:
சிவதர்மாநுஷ்டான த்வாரா சிவப்ரசாத, சம்பாதநார்த்தம்
மமவம்சே கரிஷ்யமாண: சிவதர்மா நுஷ்டானத் வாரா
சிவப்ரசாத சம்பாத நார்த்தம், மமவம்சே ஸ்ரீகுருலிங்க
ஜங்கமாரா தநாபி வ்ருத் யர்த்தம், புனரா விர்த்திரஹித
சாஸ்வத சிவைக்யரூப சிவபதப்ராதி யர்த்தம்ச விசேஷண
‡ ( ) கோத்ராத்பன்னஸ்ய ( )
நாம்ந:, வம்செ இதிலேசதி மதிய வம்சாபி விர்த்யர்த்தம்
சகோத்ரோத் பன்னம் அஸ்மதாசார பிரவிஸ்டம் குலீனம்
ரூபவம்தம் பஞ்சவார்ஷிகம் கம்சன மாணவகம்
புத்ரத்வேன, ஸ்வீகுர்மஹே

என்று சங்கல்பம், சொல்லி சர்வபூஜா விதியில் சொன்ன பிரகாரம், கணபதிபூஜா ஸ்வஸ்தி புண்யா வாசனம் நாய்தி சமாராதனம், இவைகளைச்செய்து, தத்து வாங்கிக்கொள்ளவேண்டியது தத்து கொடுப்பவன் புத்திரனை அக்ஷதைசமேதமாக கையில் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றுச் சொல்லும், மந்திரமாவது

## (2) மந்திரம்.

கிலவம் சோஸ்மி மஹேசா மமவம் சாபிவ் ருத்தயே
அங்ஞாம் ததவ்ரெ சீக்கிரம், ஸ்வீகர்த்தும், புத்திரகர்மணி

என்று சொல்லி மாஹேஸ்வரர் மீது அக்ஷதாரோபணம் செய்து தக்ஷிணை தாம்பூலங்களைக் கொடுத்து, உத்தரவுபெற்றுக் கொண்டு குமாரனைக் கொடுப்பவன் ஆசமனம் பிராணாயாமங்களைச்செய்து, தேசகாலாதிகளைச் சொல்லி,

---

‡ (கோத்ரம்) (பெயர்) இவைகளைச்சொல்லவும்.

## (3) சங்கல்பம்

ஏவம் குணவிசேஷண விஸிஷ்டாயாம் அஸ்யாம் சுபதி னௌபவத:
அபுத்ரத்வேனயோ தோஷஸ்ய மஜனிதத்தோஷ பரிஹாரார்த்தம்
தவவம்சாபி விருத்யர்த்தம்ச, அஷ்மத் பித்ரூணாம் சாஸ்வத
சிவலோகப் ராப்த் யர்த்தம், மத்புத்ரம் அத்யபக்த
மாஹேஸ்வர சன்னி தௌ தாஸ்வாமி

என்று சங்கல்பம் சொல்லி மங்கள ஸ்நானம் செய்வித்து வஸ்திராபரணங்களாலா லங்கரித்தகுழந்தையை தன் துடைமீதுக் கார வைத்து சிசுவின் இரண்டு கைகளேயும், பிடித்துக்கொண்டு,

## (4) புத்ர தான மந்திரம்.

மமபுத்ரம், ப்பரதாஸ்யாமி தவவம்சாபி வ்ருத்தயே
புத்ரதானேன, சர்வேஷாம் பித்ரூணு மக்ஷயோ பவேத்
அநேன தவவம் சோபி ஏததெ சத்வரம் புவிபுத்ரம்,
ப்ரக் ருஹ்யத்வம் சீக்ரம் சாஸ்வதம் கீர்த்தி மாப்நுஹி

என்னும் மந்திரத்தைச் சொல்லி புத்திரதானம் செய்வே னென்றுச்சொல்ல

## (5) வாங்கிக் கொள்பவன் சொல்லு மந்திரம்.

புத்ர பிக்ஷாம் ததஸ்வாசு மமவம்சாபி விருத்தயே
புத்ர தானேன தேபீஷ்டம் சத்வரம் பவதித்ருவம்

என்று யாசித்துப் பிறகு

தேவஸ் யத்வாசவிது: ப்ரசவெ அஸ்விநோர்ப் பாஹுப்யாம்
பூஷ்ணோஹஸ் தாப்யாம் ப்ரதிக் ருஹ்ணாமி

என்னு மந்திரம் சொல்லி பரிகிக்கிரக்கிறே னென்று சொல்ல வேண்டியது பிறகு,

## (6) கொடுப்பவன் சொல்லு மந்திரம்.

ராஜாத்வா வருணோ நயது தேவி தக்ஷிணெக்னயெ ஹிரண்யம்
தேநாமிர்தத்வ மஸ்யாம் வயோதாத்ரெ வயோமஹ்ய மஸ்து,
ப்ரதிக் ருஹித்ரெக இதம் கஸ்மா அதாத்காம: காமாய
காமோ தாதா காம: ப்ரதி க்ருஹீதா காமாகாம் சமுத்ர
மாவிசா காமேனத்வா ப்ரதிக்ருஹ்ணாமி காமைதத்தேஷாதெ
காம தக்ஷிணு உத்தானஸ் த்வாம் கீரச ப்ரதிக்ருஹ்ணாது

என்று சொல்லிப் புத்திரனைக் கொடுக்கவேண்டியது, பிறகு புத்திரனை பரிக்கிரகித்து, புத்திரனின் மஸ்தகத்தை (3) தடவை ஆக்ராணித்து, தத்தம் செய்யவேண்டியது, எப்படி என்றால் தேசகாலாதிகளைச் சொல்லி

## (7) சங்கல்பம்.

ஏவம் குணவிசேஷண விசிஷ்டாயாம் சுபதிதௌ அஸ்மின் புத்ரஸ்வீகார
கர்மணி தத்த: வநாக்யம் கர்ம கர்த்தும்,
ஆசார்யத்வேனத்வாம் வ்ருணீ மஹே

என சங்கல்பம் சொல்லி ஒரு மாஹேஸ்வரனை ஆசார்யனாக வரிப்பது, மாஹேஸ்வரன்,, வ்ருதோஸ்மி கரிஷ்யாமி,, என்றுசொல்ல வேண்டியது, பிறகு ஓமப் பிரகரணத்தில் சொன்னமாதிரி சங்கல்பத்தில்மாத்திரம் "தத்தஹவன" என்றுச்சரித்துக் கொண்டிருக்கவேண்டியது, ஹோமம் செய்யவேண்டியது. ஹோமம் செய்த ஆசார்யருக்கு அலங்காரசஹிதமான வ்ருஷபத்தைத்தானமாகக் கொடுக்கவேண்டியது, பிறகு பலபூஜை செய்வதற்காகத் தேங்காய் பழம் முதலானவைகளைவைத்து தேசகாலாதிகளைச் சொல்லிப் பிறகு

## (8) பலபூஜா சங்கல்பம்.

ஏவம் குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதௌ
சுத்தி வ்ருத்யப் யுதய சித்தித்வாரா பலதேவதாம்தர்வர்த்தி
ஸ்ரீசாம்ப சாதாசிவப்ரீதயே புத்ரஸ்வீகாரகர்மாங்கபூத
பலபூஜாம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி பூர்வோக்த உபசாராதிகளால் பூஜித்த பிறகு

## (9) ஹிரண்யோதக மந்திரம்.

ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸு:
அநந்த புண்ய பலதம தஸ்பாம்திம் ப்ரயச்சமெ
என்றிம் மந்திரம் சொல்லி ஹிரண்யோதகம் விட்டுப்பிறகு

## (10) பலதான மந்திரம்.

பலம் மனோரதபலம். ப்பிரததாதி சதாந்ருணாம் புத்ர
ப்வுத்ராபி வ்ருத்யர்தம், அதஸ்பாம்திம் ப்பிரயச்சடமே
இதம பலதானம் சதக்ஷிணாகம் சதாம் பூலம்.
ஸ்ரீசாம்ப சதாசிவப்ரீதிம், காமயமானஸ் சிவரூபிணெ
துப்யமஹம் சம்ப்ரததெ நமம, நமம,

என்றிம் மந்திரம் உச்சரித்துக்கொண்டு மாஹேஸ்வரருக்குப் பலதானம் கொடுக்கவேண்டியது, பிறகு பதிபுத்ரருள்ள புண்ய ஸ்ரீகள் ஆரதிஎடுத்தபிறகு யதாசக்தி தக்ஷிணாதானைச்செய்யவேண்டியது.

இதி, தத்து புத்ரஸ்வீகாரம், முற்றிற்று

( இஃது சுயம் புரோஹிதம் )

# சக்தி விசிஷ்டாத்வைத மதம்.

துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைத மதங்களைப் போலவே, சக்தி விசிஷ்டாத்வைத (வீரசைவ) மதமும் ஒரு பிரத்யேக வைதிக மதமாயிருந்தும் இப்போது சிலகாலங்களாக சம்ஸ் கிருத பாஷையிலுள்ள அத்வைதபரமான பஞ்சதசப்பிரகரணம், விசார சாகரம், ஞானவாசிஷ்டம், ஞானசிந்து, முதலான கிரந்தங்களைப் படித்தும் கேட்டும் வந்ததினால் மாயாத்வைதசித்தாந்தமே வீரசைவ சித்தாந்தமென பிரமித்து விடுகிறார்கள், அதி பவுத்திரமானதும் சகல சுருதிகளின்சம்மதமானதும் அத்தியந்த சனாதன (புராதன) மானதுமான தங்களது சக்திவிசிஷ்டாத்வைத தத்துவத்தை நிஷேதித்து பேருக்கு மாத்திரம் லிங்கதாரிகளென்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள், இப்போது பிரபஞ்சத்தில் யாருக்கு எப்பாஷை தெரிந்திருக்கிறதோ அப்பாஷையிலுள்ள கிரந்தங்களைப் படிப்பதாலவைகளிடத்தில் அபிமானமுண்டாவது சுபாவமாயிருக்கிறது, உலகத்திலந்தந்த மதத்தின் பண்டிதர்கள் தங்கள் தங்கள் தேசபாஷைகளில் தங்கள் தங்கள் மத கிரந்தங்களை எழுதி பிரசித்தப்படுத்திக்கொண்டு வந்திருப்பதால் அந்தந்த கிரந்தக்கர்ரர்களின் கீர்த்தியும் மத பிரவர்த்தகர்களான ஆசார்யர்களின் மஹாத்துவங்களும் ஜனங்களிடத்தில் வேரூன்றியிருக்கின்றது, பூர்வகாலத்தில் சம்ஸ்கிருதபாஷையிலிருந்த அத்வைத கிரந்தங்களை அம்மதத்தின் பண்டிதர்களனேகர்கள் தேசபாஷையில் மொழிபெயர்த்து அச்சிட்டுப் பிரசுரித்து வந்ததினாலிப்போது யாரிடத்தில் பார்த்தாலும் அத்வைத கிரந்தங்களே காணப்படுகின்றன, சில காலங்களாக சக்திவிசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைத் தெரிந்தவீரசைவ பண்டிதர்கள் இம்மதத்தில் குறைந்துக்கொண்டு வந்ததினால் சம்ஸ்கிருத பாஷையிலிருந்த நூல்கள் புழுக்களின் வசமாகி வந்ததல்லாமல் தேசபாஷைகளில் பிரசித்தமாவதும் முயற் கொம்பாயிருக்கிறது, மீதமுள்ள புழுக்களைப்போல சிற் சில பண்டிதர்கள் ஆங்காங்கிருந்தாலும் அவர்கள், சித்தாந்த கிரந்தங்களைப் படிப்பதிலேயே காலங்கடத்திக்கொண்டு தங்கள் தங்கள் கிருஹ கிருத்தியங்களை மாத்திரம் நிர்வாஹம் செய்துக்கொண்டு இஹலோஹ யாத்திரையை முடித்தார்கள், மற்றும் மடாதிகாரிகளென்பவர் சில காலமாக சம்ஸ்கிருத கிரந்தங்களையே யறியாதவர்களாகி கேவலம் உதரபோஷணை நிமித்தமாக மந்திரம், கோப்யம், மிஸ்ரார்ப்பண முதலானவைகளையே கைக்கொண்டு வீரசைவ சித்தாந்தாநுசாரமாக நித்தியநைமித்திகாதி கருமங்களைத் தங்கள் தங்கள் பக்தருக்

குச் சரியாகப் போதிக்காமலிருந்து வந்தார்கள், மற்றும் சிலர் தங்கள் பார்வைக்கு எந்தெந்த தேச பாஷைகளின் கிரந்தங்கள் கிடைக்கின்றனவோ அக்கிரந்தங்களைப் படித்து அதிலுள்ளவையெல்லாம் தங்கள் மதத்திற்குச் சம்பந்தப்பட்டதென நினைத்து வீரசைவ சித்தாந்தானுகுணமான உபாசனாமார்க்கத்தையும் ஞானமார்க்கத்தையும் கைவிட்டுக்கொண்டே வந்தார்கள், இதனாலிப்போது எவ்விடம் பார்த்தாலும் வாக்காத்வைத ஆடம்பரமே அதிகமாகி குரு சிஷ்ய தர்மம் முன் பின்னாகவும் அதர்மத்துக்கு இடமுண்டாயிற்று,

சிலர் கன்னடபாஷையிலுள்ள நிஜகுணாராத்தியரின் ஆறு புஸ்தகங்களைப்படித்து இவைகளே ஷட் சாஸ்திரங்களெனப் பிரமித்து இக்கிரந்தங்களிலுள்ள சக்திவிசிஷ்டாத்வைத மதத்தும் இப்படியே அத்துவைத மதத்தும் உள்ள வித்தியாசங்களைக்கண்டு கொள்ள சக்தியில்லாமல் அங்குச் சொன்னவையெல்லாம் வீரசைவ மதத்துவமெனவேயூகித்து ஸ்வமதத்திற்கு விரோதிகளானார்கள், மற்றும் சில பண்டிதர்கள். ஸ்வபாஷையிலெழுதியுள்ள அத்வைத கிரந்தங்களான விசார சாகர , பஞ்சதசப் பிரகரணம், ஞானவாசிஷ்டம், முதலான கிரந்தங்களைப்படித்தும் கேட்டும் இம்மாயாத்வைதமே வீரசைவ சித்தாந்தமெனச் சொல்லி ஸ்வமத விரோதிகளானார்கள், இப்படியாக வீரசைவ சித்தாந்த கிரந்தங்கள் தேசபாஷைகளிலில்லாமலிருப்பதாலும் வேறுபாஷைகளில் மொழி பெயர்க்கும் பண்டிதர்களின் சங்கை குறைந்துக்கொண்டு வந்ததினாலும் ஸ்ரீரேணுகாதி பகவத்பாதர்களால் பிரதிஷ்டிதமான அப்ராகிருதசிவதர்மானுஷ்டானங்கள் கிலமாகி(சிதிலமாகி)பிராக்ருத நியமங்கள் இம்மதத்தினிடத்தில் அதிகரித்துக்கொண்டு வந்தது, உலகத்தில் மூடஜனங்கள் தாங்களெதைப்படிக்கிறார்களோ அல்லது மற்றவர்களால் கேழ்க்கிறார்களோ அவையெல்லாம் நமது மதத்தினவைகளேயென நினைப்பது அநுபவத்திலிருந்து வருகிறது, இதனால் பூர்வாசார்யர்களின் மஹாவாக்யோபதேசங்களின் பலங்குறைந்து வந்திருக்கிறது, இப்போது அப்படிப்பட்ட மூடர்களின் கைகளில் எவ்விடம் பார்த்தாலும் அன்னிய மத தர்மப்பிரதிபாதகங்களான விசாரசாகராதி கிரந்தங்களே நடனமாடுகின்றன, இம்மதத்தினரில் அற்ப சொற்பம் தெரிந்தவரானாலும் அவர்களுங்கூட வீரசைவர்களுக்கு லிங்கதாரணம் லிங்கபூஜைகள் மாத்திரம் தனிப்பட்டவையே யொழிய மற்றவைகளெல்லாம் அத்வைதானுபவமேயென அபினிவேச (எண்ண)முள்ளவர்களாயிருக்கிறார்கள், தற்போது இம்மதத்திலனேகர் சம்ஸ்கிருதபாஷா பண்டிதர்களானபடியால் சிற்சிலவிடங்களில் வேரூன்றிநின்றுள்ள இவ்விஷம சம்ஸ்காரத்தைவிட்டு ஸ்வதர்மசிற

த்தையையுண்டாக்கதாம் வீரசைவசித்தாந்தத்தை நன்றாகத்தெரிந்துக்கொண்டு அம்மூல கிரந்தங்களை தேசபாஷைகளில் மொழிபெயர்க்கத்துடங்கி (ஆரம்பித்து) எத்தனையோ கிரந்தங்களைப் பிரசுரித்து மாயாத்வைதத்திற்கும். சிவாத்வைதத்திற்குமுள்ள தாரதம்மியங்களைத் தெரியப்படுத்திக்கொண்டு வந்திருப்பதானது, ஆசார்யபகவத் பாதர்களின் அநுக்கிரஹமென்றே சொல்லவேண்டியிருக்கிறது, இதனாலிப்போது அநேகவிடங்களிலுள்ள அசம்ஸ்கிருதர்களான ஜனங்களின் கண்கள் திறந்திருக்கிறது, ஸ்வசித்தாந்தத்தில் சொன்ன தர்மங்களைத்தெரிந்துக்கொண்டு முன்பு நடத்திக்கொண்டு வந்த விதர்மங்களை விலக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

சிவாத்வைதமான வீரசைவ மதத்திற்கும், மாயாத்வைதமான அத்வைத மதத்திற்கும் கிஞ்சிற்றேனும் சம்பந்தமில்லை, ஆதிபந்தமாக இவையிரண்டிற்கும் வையதிகரண்யம்(பேதம்) இருக்கிறதேயொழிய ஒன்றிலாவது சமானாதிகரண்யமே இருப்பதில்லை இம்மதங்களின் மூலகர்த்தாக்கள் வேறுவேறாயிருக்கிறார்கள். சக்தி விசிஷ்டாத்வைத (வீரசைவ) மதத்திற்கு ஸ்ரீரேணுகாதி பஞ்சாசார்யர்கள் கர்த்தாக்களானால், அத்வைத மதத்திற்கு ஸ்ரீ சங்கராசார்யர் கர்த்தாவாயிருக்கிறார், ஸ்ரீரேணுகாசார்யாதிகள் ஞான கர்ம சமசமுச்சய(சம்யோக)த்தினால் முக்தியெனச் சொன்னால், சங்கராசார்யர் ஞான மொன்றினாலேயே முக்தியென்கிறார் ஸ்ரீ பஞ்சாசார்யர்கள் ஜகத்து நித்தியமென்றால், சங்கராசார்யர் மித்தையென்கிறார், பஞ்சாசார்யர்கள் பிரஹ்மம் சர்வக்ஞத்வாதி கல்யாண குணவிசிஷ்டமென்றால், சங்கராசார்யர் நிர்விசேஷமெனச்சொல்கிறார், பஞ்சாசார்யர்கள் சுருதிகளில் சொன்ன பேதாபேதங்களிரண்டும் பாரமார்த்திகமென்றால், சங்கராசார்யர் அபேதமொன்றே பாரமார்த்திகமென்பார். பஞ்சாசார்யர்கள் சிவயோகத்தினால் முக்தியென்றால் சங்கராசார்யர் விசாரத்தினாலேயே முக்தியென்பர் பஞ்சாசார்யர்கள் சர்வகாரணமான மஹேஸ்வரனொருவனையே பதிவ்ரதா தர்மத்துடன் அர்ச்சித்துப்பூசிக்கவேண்டுமென விதித்தால் சங்கராசார்யர் ஆதித்யாதி பஞ்சதேவதைகளின் பூஜையை விதித்தார், பஞ்சாசார்யர்கள் அந்தக்கரண விருத்திகள் நித்தியமென்றால் சங்கராசார்யரிதையனித்தியமென்பர், பஞ்சாசார்யர்கள் சக்தியானது பிரஹ்மத்தினிடத்தில் பின்னமானதினால் முக்திதிசையில் ஸ்வரூபமானது நஷ்டமாகிறது தனக்கு மூலபூதமான சிவசக்தியில் லீனமாகிறதெனச்சொன்னால், சங்கராசார்யர் பிரஹ்மக்ஞானத்தினாலவித்தைஸ்வரூபமானது நஷ்டமாகிறதெனச்சொல்கிறார். பஞ்சாசார்யர்கள் ஜகத்து பிரஹ்மத்தின் பரிணாமமெ(வேறுபாடெ)ன்றால், சங்கரர்விவர்த்த (கற்பித)மென்கிறார், பஞ்சாசார்யர்கள் சித்சக்தியின் சங்கோச

(கூடின)ரூபமான சித்தவிசிஷ்டமே ஜீவனெனச்சொன்னால், சங்கரர் அந்தக்கரணத்தில் பிரதிபலித்த (பிரதிபிம்பித்த) ப்ரஹ்மமே ஜீவனெனச்சொல்கிறார், பஞ்சாசார்யர்கள் சித்தவிகாசத்தினால் (மனம்முதலான அந்தக்கரணங்கள்நான்கும் விரிதல்அல்லது மலர்தலினால்) சிவத்வப்பிராப்தியெனச்சொன்னால் சங்கரர் சித்தாதிகள் நாசமான பிற (மனம் முதலான அந்தக்கரங்கள் நசித்தபிற)குண்டாகும் பரமானந்தப்பிராப்தியே முக்தியெனச்சொல்லுவர், பஞ்சாசார்யர்கள் தங்கள் சித்தாந்தத்திற்குசக்திவிசிஷ்டாத்வைத சித்தாந்தமென்றால் சங்கரர் அத்வைத சித்தாந்தமென்பர்,

இப்படியாக எல்லாவிஷயங்களிலும் வைலக்ஷண்ய (வித்தியாச) மேகாணப்படுவதால் அத்வைத மதத்திற்கும் சக்திவிசிஷ்டாத்வைத(வீரசைவ)மதத்திற்கும் மேரு(மலை)சர்ப்பத்தளவுவித்தியாசமிருந்தும் இவைகளைப்பரியாலோசனை செய்யாமல் அவ்விடங்களில்ச்சொன்ன சில அத்வைதபரமானவாக்கியங்களைச்செவியினால் கேட்டமாத்திரமே பூர்வாபர பிரகரணத்தைப்பார்க்காமலும் இவ்வீரசைவமதத்தை அத்வைத சித்தாந்தத்தில் அந்தர்ப்பாவம்செய்யப்படாத ஆசார்ய பகவத்பாதர்களால் சொல்லப்பட்ட முக்திசாதனங்களான பக்தமாஹேசாதிசட்ஸ்தலாசரணைகளும் மாமிசபிண்ட நிவிர்த்திபூர்வகமானதும் மந்திரபிண்டத்வப்ராப்திரூபமான சிவதீக்ஷாபூர்வகமான லிங்கதாரண மஹாவிரதம் முதலானவைகளுக்கெல்லாம் அர்த்தமில்லாதனவாக முடியும், இவைகளையெல்லாம் மறந்து தங்கள் குருக்களின் மார்க்கத்திற்கு விரோதமாக தப்புமார்க்கத்தில் நடக்கப்பட்டஜனங்களின் மஹோபகார நிமித்தமாகதற்காலத்திய சில வீரசைவ பண்டிதர்கள் சம்ஸ்கிருதபாஷையிலுள்ள சக்திவிசிஷ்டாத்வைத சித்தாந்த அபிப்பிராயங்களை கர்னாடகபாஷையில் பிரசுரித்து அன்னியகிரந்தங்களாலுண்டான பிரேமையை (பிராந்தியை) போக்கி லிங்கிதர்மம் அநுஷ்டானத்தில் வருமாறு செய்கிறார்கள், இம் மஹோதயர்களுக்கு ஸ்ரீ ஜகத்குரு பஞ்சாசார்யர்கள் அநுக்கிரகிக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

முற்றிற்று.

(14—7—30 பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.)

ஸ்ரீ பஞ்சபீடாதி தேவதாபை நம:

# வீரசைவரின் நியமங்கள்.

வீரசைவ (லிங்காயுத)ர்கள் குரு, லிங்க, ஜங்கம, விபூதி ருத்ராக்ஷம், மந்திரம் பாதோதக, பிரசாதம் இவைகளின் சேவையைத்தவிர்த்து அன்னிய தெய்வங்களுக்கு என்றால் கோவில்களிலிருக்கப்பட்ட, எல்லம்ம முதலான வேறெந்தத் தேவதைகளுக்கும்நமஸ்காரம் செய்யக்கூடாது பிரசாதமும் பெற்றுக்கொள்ளக் கூடாது. பிரார்த்தனைகள் செய்துக்கொள்ளக்கூடாது,

இஷ்டலிங்கார்ச்சகோ மர்த்ய : பாவன : பங்க்திகர்மசு
ஸ்திரலிங்கார்ச்சகோ மர்த்ய : நசுத்த : பங்க்திகர்மசு

என்னும் சித்தாந்தத்தைப்போல இஷ்டலிங்காதாரனைச் செய்பவர்களுடன் பந்திபோஜனுதிவிபவஹாரங்கள் செய்யவேண்டுமேயல்லாது இதரர்களுடன் பந்தி போஜனுதி வியவஹாரங்கள் செய்யக்கூடாது. குருக்களினுல் உபதேசத்தையும் முக்திகாரணமானசிவலிங்கத்தை புமடைந்த பிறகு "லிங்கமத்யே ஜகத்சர்வம்" இந்த ஜகத்தெல்லாம் சிவலிங்க மொன்றிற்குள்ளாகவே அடங்கியிருப்பதால் ஜகத்கர்த்தனை இந்த இஷ்டலிங்கம் சரீரத்தின் மேலிருக்க ஏகசித்தத்துடன் அவனின் சேவை செய்யாமல், அவனைப்பூஜிக்காமல், பஜிக்காமல், வீரசைவ சித்தாந்தத்திர்க்கநுசரணையான பதிவிரதா சுபாவத்தைவிட்டு இதரதெய்வங்களை வணங்கிக்கொண்டும் குங்குமம் பண்டாரம் (மஞ்ஜள் தூள்) நெற்றியிலிட்டுக்கொண்டு, திரிலோக பாவனமான விபூதியினிடத்தில் ஆதாரணையில்லாதிருப்பதால் குருக்களினுல் தரிக்கப்பட்ட பரஞ்சோதி ஸ்வரூபமான இஷ்டலிங்கத்திற்கு எவ்வளவு அவமானம் செய்தாப் போலாகிறது பாருங்கள், எப்படியென்றால் ஒரு ஸ்திரீ தான் கல்யாணம் செய்துக்கொண்ட புருஷனைவிட்டு அன்னிய புருஷனிடத்திலிருக்கப் பிரியப்பட்டால் சொந்த புருஷனுக்கு எம்மாதிரி அவமானமாகுமோ இப்படிப்போலவே குரு கொடுத்த இஷ்டலிங்கத்தின் நிஷ்டைதப்பினுலதனுல் அனேக சங்கடம், வியாதி, தாரித்திரியம், (தரித்திரம்) நரகப்பிராப்தியுமுண்டாகுமென்று பரமேஸ்வரன் பார்வதிக்குச்சொல்லியிருக்கிறுர், ஆகையால் குரு லிங்க ஜங்கம பாதோதக பிரசாதம் இவைகளில் பக்தியுடன் நடந்துக்கொண்டவருக்கும் பூஜித்தவருக்கும் இஹபரசுகமான போக மோக்ஷங்களுண்டாகுமென்று அநேக கிரந்தங்களில் சொல்லியிருக்கிறது. ஆகையால் லிங்காயுதர்கள் பரதேவதைகளை வணங்கி மதபிரஷ்டராகாமல் குரு, லிங்க, ஜங்கம, பாதோதக, பிரசாத, விபூதி, ருத்ராக்ஷ, மந்திரங்களினுல் பக்தியுடன் பூஜிக்க வேண்டியது, இப்படிக்கல்லாமலிருந்தால் சர்வதேவமயனுன சிவனொருவனையே பூஜிக்கவேண்டுமென்னும் வீரசைவ சித்தாந்தத்

திற்கு ஹானியுண்டாகிறது, ஆகையால் நம்மமதத்திற்கு விரோத மில்லாமல் நடந்து சிவபிரீதிக்குப்பாத்திரராகவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

ஊதா அல்லது நீலநிறமுள்ள குங்குமங்களும், கறுப்பு நிறமான சாந்துக்களும் அமங்கல வஸ்துக்களாகையால் வீர சைவ (லிங்காயுத)ர்கள் அணியக்கூடாது, அணிந்துகொள்ளவும் கூடாது.

17—12—28. பிரபாபத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

## லிங்காயுத மதப்பிரவர்த்தி.

ஜகதத்தாதியில் பரமேஸ்வரனால் நிர்மிதமான வீர சைவ மதம் அனாதி சம்சித்தமானதென்பதற்கு இச்சகத்தே சாக்ஷியாயிருக்கிறது, எப்படியென்றால் சிருஷ்டியின் ஆதியில் பர மேஸ்வரன் பிரம்மனிடம் சிருஷ்டிகாரியம் செய்யென்றாக்ஞாபிக் கவும் பிரம்மன் சிருஷ்டிகாரியம் தெரியேனெனவும் முதல் முத லாக சிருஷ்டித்துக்காட்டினால் சிருஷ்டிக்கிறேனென்று விண்ணப் பிக்கவும் அப்பரமேஸ்வரன் தன் பஞ்ச முகங்களினால் பஞ்சகண வரன்களையுண்டாக்கி இக்கணவரர்களினால் சக்திவிசிஷ்டாத் வைதமான வீரசைவ (லிங்காயுத) மதத்தையுண்டாக்கிக்காட்டி னாரென்று சகல வேதாகமங்களில் கூறியுள்ள விஷயம் சுப்ரசித்த மானதாயிருக்கிறது. இச்சிருஷ்டிக்கு அப்ராகிருத சிருஷ்டி யெனப்பெயர், சிருஷ்டிகாரியத்தையறியாத பிரஹ்மன்

யாதாவீரசைவ மதோத்பத்தி: ததாஜகதுத்பத்தி:

என்னும் மாதிரியாக எப்படி வீரசைவமதம் உற்பத்தி யாயிற்றோ அப்படியே ஜகதுற்பத்தியையுண்டாக்கினனென்பது இதின் கீழ்வரும் விஷயங்களினால் தெரியவருகிறது.

இந்த லிங்காயுத மதத்திற்கு ரேணுகர், தாருகர், ஏகோ ராமர், பண்டிதாராத்யர், விஸ்வாராத்தியரென்னும் பஞ்சாசார் யர்களே கர்த்தர்கள், இச்சகத்திற்காவதும் பிரஹ்ம, விஷ்ணு, ருத்திர, ஈஸ்வர, சதாசிவர்களென்னும் பஞ்சபிரஹ்மர்களே கர்த் தர்களாயிருக்கிறார்கள்,, இம்மதம் பட்விடி, விருஷ்டி, லம்பன, முக்தகுச்ச, பஞ்சவர்ணங்களென்னும் பஞ்ச மஹாசூத்திரங்களி னால் யுக்தமாயிருக்கின்றன,, இச்சகத்து பிருதிவு, அப்பு,தேய்வு, வாய்வு, ஆகாசங்களென்னும் பஞ்சமஹாதத்துவங்களினால் யுக்த மாயிருக்கிறது,, வீரசைவமதம் குரு, லிங்கம், ஜங்கமம், விபூதி, ருத்ரக்ஷம், மந்திரம், பாதோதகம், பிரசாதங்களென்னும் அஷ் டாவர்ணங்களினால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது,, இச்சகத்து பூமி, ஜலம், அக்கினி, வாய்வு, ஆகாசம், ஆத்மன், சூரியன், சந்திரன், என்னுமிவ்வெட்டு தத்துவங்களினால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது,, சிவனுடைய தேஹ (சரீர) மும் இவ்வெட்டு தத்துவங்களினால்

கூடினதாயிருக்கிறது, வீரசைவமதம் பிரதியொருவிஷயத்திலும் பஞ்சதத்துவங்களையும் உட்கொண்டிருக்கிறதென்னும் விஷயத்தை இதின்கீழ் விவரிக்கப்பட்டிருக்கிறது.

சாத்யோஜாதம், வாமதேவம், அகோரம்,, தத்புருஷம் ஈசானங்களென்னும் பரமேஸ்வரனின் பஞ்சமுகங்களும், தத்பஞ்சமுகோத்பவர்களான ரேணுகர், தாருகர், ஏகோராமர், பண்டிதாராத்தியர், விஸ்வாராத்யரென்னும் பஞ்சகுருக்களும்,, பட்விடி, விருஷ்டி, லம்பன, முக்தகுச்ச, பஞ்சவர்ணங்களென்னும் பஞ்சகோத்திர புருஷர்களும்,, பீடம், விருத்தம், கோளகம், மஸ்தகம், கோமுகங்களென்னும் பட்சசூத்திரங்களனுசரித்தலிங்கமும், வஸ்திரம், கௌபீனம், கமண்டலம், தண்டம், பஸ்மம், என்னும் பஞ்சமுத்திரைகளுடன்கூடின குருமூர்த்தியும்,, நிவர்த்தி, பிரதிஷ்டா வித்யா, சாந்தி. சாந்தியாதீதங்களென்னும் பஞ்சகலைகளும்,, இப்பஞ்சகலைகளிலுதித்த நந்தை, பத்ரை, சுரபி, சுசீலை, சுமனை, என்னும் பஞ்சசக்திகளும்,. தத்பஞ்சகோமயத்தினுலான பூதி, பசிதம், பஸ்மம். க்ஷாரம். ரக்ஷை என்னும் பஞ்ச விபூதிகளும்,, கிரஹண, கபளனம், சேஷனம். தஹனம், சோதனங்களென்னும் பஞ்சகிருத்தியங்களும்., பஞ்சமுக ருத்ராக்ஷங்களும் மற்றும் பிரசாத பஞ்சாக்ஷரம், மாயாபஞ்சாக்ஷரம், சூட்மபஞ்சாக்ஷரம், ஸ்தூலபஞ்சாக்ஷரம், மூலபஞ்சாக்ஷரங்களென்னும் பஞ்சபஞ்சாக்ஷரி மந்திரங்களும்,, லிங்காசாரம், சதாசாரம் பிருத்யாசாரம், சிவாசாரம், கணுசாரங்களென்னும் பஞ்சாசாரங்களும்,, இன்னும் இச்சகத்தின் விசாரமாவதும் பிறதியொருவிஷயத்திலும் பஞ்சதத்துவங்களை யுட்கொண்டிருக்கும் இவ்வீரசைவ மதத்தை இதின் கீழ் சொல்லுகிறேன்.

பரப்பிரஹ்மமானது சத்து, சித்து, ஆனந்தம் நித்தியம் பரிபூரணங்களென்னும் பஞ்சமஹாலக்ஷணங்களினுல் கூடினதாயிருக்கிறது,, சிருஷ்டி, திதி, லயம், திரோதானம், அனுக்கிரகங்களென்னும் பஞ்சகிருத்தியங்களும்,, தபசு, கர்மம், ஜபம், தியானம், ஞானங்களென்னும், பஞ்சகிரியைகளும்,, மந்திர ஹட, ராஜ, லய, சிவயோகமென்னும், பஞ்சயோகங்களும்,, ஞானம், மக்ஷை, தபசு, சர்வசம்வாதம், துக்கசம்க்ஷயம் சுகாவிர்ப்பாவமென்னும் பஞ்சப்பிரயோஜனங்களும்,, கர்மி, முமுக்ஷு, அப்யாசி, அநுபவி, ஆரூடரென்னும் பஞ்ச அதிகாரிகளும்,, லௌகிக, வைதிக, ஆதியாத்மீக, ஆதிமார்க்கீக, மந்திரங்களென்னும், பஞ்ச சாஸ்திரங்களும்,, ஜாக்கிரம், சுவப்னம், சுசுப்தி, துரியம், துரியாதீதங்களென்னும், பஞ்ச அவஸ்தைகளும்,, தமசு, மாயை, மோஹம், அவித்தை அநிருதாத்மிகைகளென்னும் பஞ்சமாயைகளும்,, அசத்து, ஜடம், துக்கம், அநித்தியம்,, கண்டிதங்களென்னும் மாயாபஞ்சலக்ஷணங்களும்,, அவித்தை, அஸ்மிதம்,

ராகம், துவேஷம், அபினிவேஷங்களென்னும் பஞ்ச கிலேசங் களும்,, அந்தக்கரணம், மனம், புத்தி, சித்தம், அஹங்காரங் களென்னும், அந்தக்கரண பஞ்சகங்களும்,, வியானன், சமானன், உதானன், பிராணன், அபானன்களென்னும், பஞ்சப்பிராணன் களும்,, அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம, விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசங்களென்னும் பஞ்சகோ சங்களும்,, சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ஜிக்வா, கிராணங்க ளென்னும் பஞ்ச ஞானேந்திரியங்களும்,, வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தங்களென்னும் பஞ்ச கர்மேந்திரியங்களும், சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தங்களென்னும் பஞ்ச விஷயங்களும்,, வெள்ளை, மஞ்சள், சிகப்பு பச்சை, நீலமென்னும், பஞ்சவர்ணங் களும்,, விசேஷணம், விசேஷ்பம், கர்த்துரு, கர்மம், கிரியை களென்னும், பஞ்ச அன்வயங்களும்,, மந்தாரம், பாரிஜாதம், சந் தானம், கல்பம், ஹரிசந்தனங்களென்னும் பஞ்சாங்கங்களும்,, இத்தியாதியனேக விஷயங்களினால் கூடின பிரம்மமாயா சம்போக யுக்தமான ஜகத்து, மற்றும் சக்திவிசிஷ்டாத்வைதமான வீரசைவ மதம் பஞ்சதத்துவங்களினால் நிர்மிதமாயிருப்பதான பிரயுக்த

யதாவீரசைவ மதோத்பத்தி: ததாஜகதுத்பத்தி:

என்பது சித்தாந்தம்.

வித்தில் விருக்ஷம் எப்படி அடங்கிக்கொண்டிருக்கி றதோ அப்படியே பரப்பிரஹ்ம சுரூபமான இஷ்டலிங்கத்தில் ஜகத்துலீனமாயிருக்கிறது. வித்து பஞ்சதத்துவங்களின் ஆசிரய மடைந்தால் ஏகசிதமாகமுளையுண்டாகி ரூபாந்தரத்தைபடைந்து (விளைந்து) சாகோபசாகைகளினால்கூடி புஷ்பபலங்களாகிப்பிறகு தான் எந்தவித்துரூபமாகயிருந்ததோ அந்த வித்தின்ரூபத்தை தலையில் தரித்தபிறகு ரூபாந்தரத்தையடைவது நின்றுவிடுகிறது. இப்படியே பிராணிகளிடத்தாவதும் கிருமி கீடபசு முதலான அநந்த ஜன்மங்களையெடுத்து (ரூபாந்தரத்தையடைந்து) கடைசி யில் மானவ ஜன்மத்திற்கு வந்து பீஜரூபமான இஷ்டலிங்கத்தை தரித்தபிறகு ரூபாந்தரமடையும்(ஜன்மத்தை ஒழிக்கும்)முக்தாய மாக புனர்ஜன்மமில்லாமல் பரப்பிரஹ்ம சுரூபியாகிப்போவான், ஆனதினால் இவ்வீரசைவ (லிங்காயுத) மதம் அனுதிசம்சித்த மானதென்பதற்கு இச்சிருஷ்டியே சாக்ஷியாயிருக்கிறது, இப்படி மஹத்துவமான வீரசைவமததத்துவத்தையரியாமல் அஞ்ஞானி கள் கலியுகத்தின் பிராபல்யத்தினால் தூஷிப்பது அதிபாதத்திற் குக்காரணமாயிருக்கிறது, பிரிய மஹாசயரே இப்பவித்திரமான லிங்காயுத மதத்தின்மேல் முழுநம்பிக்கை வைத்து கிருதகிருத்தி யர்களாகுவீர்களென்று நம்பிக்கொண்டிருக்கிறேன்.

29—4—29. இஃந்து பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

# விபூதி தயாரிக்கும் விதம்.

பசுவின் சாணத்தை கோமயம் விட்டுப்பிசைந்து உருண்டை செய்துலர்த்தி அக்கினியிலிட்டு தகித்து ஆறின பின்பு எடுத்ததை வஸ்திரகாயம் செய்துப்பின்பு பசுவின்கோமயமாவது அல்லது கோமயத்துடன் சுத்தஜலமாவது சேர்த்து முன் வடிகட்டின விபூதியை போட்டுப்பிசைந்து உருண்டைசெய்துலர்த்தி திரும்பவும் அக்கினியில்தஹித்தாவது தஹிக்காமலாவது, எடுத்துவைத்துக்கொள்ள வேண்டியது. இதில், வெண்ணிற விபூதியே சிரேஷ்டமானது. இதைக்கல்ப்பமென்றும், உத்தமமானதென்றும், சுட்ட விபூதியை கோமயத்தாலுருண்டை செய்யாமலிருக்கும் விபூதி, அநுகல்பமென்றும், இதுமத்திமமானதென்றும், அன்னியரால்தயாரித்தவிபூதி அகல்பமென்றும், இது அதமமானதென்றும், இவ்விபூதிகளே சிவமென்றும், சூக்ஷ்மகாலாக்கினி யென்றும், அக்கினிக்குச் சமானமென்றும், ருத்ரோபநிஷத்தில், சொல்லியிருக்கிறது.

## ருத்ராக்ஷ உற்பத்தி

திரிபுரதஹன காலத்தில் ஈஸ்வரலீலா சமயத்தில், அவர் சந்திரசூர்ய அக்கினியென்னும் மூன்று நேத்திரங்களின் ஜலபிந்துக்களினால் கிரமமாக சாத்வீக குணவெள்ளைவர்ணருத்ராக்ஷமும், ராஜோகுண ரக்தவர்ணருத்ராக்ஷமும், தமோகுண கருப்புவர்ணருத்ராக்ஷமும் உற்பத்தியாயிற்று. சர்வபாபங்கள் நசிக்கவும் சிவப்ரசாதக்ஞாநசித்திக்காகவும், விபூதி தாரணத்தின் பிறகு ருத்ராக்ஷதாரணம் தரித்தல் வேண்டும், வீரசைவர்களெவ்வொருவரும், உட்கழுத்தில்ஒத்தைருத்ராக்ஷதாரணமாவது யெப்போதுமிடைவிடாது தரித்திருத்தல் வேண்டும், இன்னும் விஷேச பூஜாகாலங்களில் கழுத்திலணிய 32 மணியுள்ள ருத்ராக்ஷமாலையும், யக்ஞோபவிதத்திற்கு 108, ருத்ராக்ஷமணிகளும், சிரசிலணிய 11, ருத்ராக்ஷமணிகளும், தோள்களுக்கு, 16, ருத்ராக்ஷமணிகளும், கைகளுக்கு 12 ருத்ராக்ஷமணிகளும், கழுத்திலிருந்து வயிர்வரையில், 50, அல்லது 54, ருத்ராக்ஷமணிகளுள்ளமாலையும்தரிக்கலாம்,இவைகளில், பரமசிவபஞ்சமுக ரூபங்களான பஞ்சமுக, ருத்ராக்ஷங்களே நல்லவை,

## சுலோகம்.

யஸ்யாம்கே நாஸ்திருத்ராக்ஷோ எகோபி பஹுபுண்யத:
தஸ்யஜன்ம நிரத்தம்ஸ்யா, த்ரிபுண்ட்ர ரஹிதேயதா
ருத்ராக்ஷாணாம் சஹஸ்ரம்ஹி, முமுக்ஷுர்த்தாரயேத்சதா
ததபாவெ சதம்வாபி, தசசைக மதாபிவா

திரிபுண்ட்ரம் ரஹிதனுனவனுடைய ஜன்மம் எப்படி நிஷ்பலமாகிறதோ அப்படியே பஹுபுண்யத்தையுண்டாக்கும் ருத்ராக்ஷம் ஒன்ருவதும் எவன் சரீரத்திலிருப்பதில்லையோ அவன் ஜென்மம், நிஷ்பிரயோஜனமானது. ஆகையால் மோக்ஷ அபேக்ஷையுள்ளவர்கள் நிரந்தரமாக சஹஸ்ர ருத்ராக்ஷங்களைத்தரிக்க வேண்டியது, அல்லது நூருவதும், பத்தாவதும் தரிக்கவேண்டியது, அல்லது கடைசியாக ஒன்ருவதும் கட்டாயம் தரிக்கவேண்டியது, இது அதி அவசியமானது,

## அயோக்கிய ஜங்கமர்கள்.

தீக்ஷை பெராதவரும் தீக்ஷை பெற்றிருந்தாலுங்கூட தினமொரு தடவை அதம பூஜையாவது செய்யாதவரும் சிவலிங்கத்தைச் சரீரத்தின்மேல் சதா தரித்துக்கொண்டிராத ஆண்பெண்கள் பவிகளாகயாலிவர்கள் செய்த பாகாதிகிரியைகள் லிங்க பூஜைக்கு உதவா, இவர்கள் பவிகளாகயா லிவர்களெதிரில் லிங்க பூஜை செய்யக்கூடாது, இன்னுமிவர்கள் பந்திபோஜனம் செய்யவும் அயோக்கியர்கள், இன்னுமிவர்கள் மாங்கல்ய ஸ்த்ரீகளானுலுங்கூட சேசை நலுங்கு வைக்கவும் மாப்பிள்ளைத் தோழிகளாக உட்காரவும் அயோக்கியர்கள், இன்னுமிவர்களுக்கிவ்வெல்லா அம்சங்களும் பொருந்தி யிருந்தாலுங்கூட குழந்தையில்லாத மலடி ஆரதியெடுக்க அயோக்கியள், ஆகயால் கூடாது.

## சந்தான விக்ரயம்.

எவன் தன் உபஜீவனுர்த்தம் கன்யா விக்ரயம் அல்லது சந்தான விக்கிரயம்செய்து கிரயம் வாங்கிக்கொள்ளுகிறவனும் கன்யா விக்ரயத்தைப்போலவே வரவிக்ரயம் அல்லது ஸ்த்ரீதனம் அல்லது வரதக்ஷிணை வாங்கிக்கொள்ளுகிறவனும் நரகத்தை யடைகிருனென்று மனுஸ்மிருதி முதலான சாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றன,. இன்னுமிவர்கள் பாதகரென்றும், அநிஷ்டரென்றும், நிந்தையுள்ளவர்களென்றும் பெயர், இவர்கள் அதோகதிக்காளாகி தோஷிகளாகிருர்களென்றும், மற்றும் நரகத்தை யனுபவிப்பார்களென்றும் சொல்லியிருக்கிறது,மற்றும் கன்னிகையை கிரயத்திற்கு வாங்கிபாணிக்கிரஹணம்செய்தால் அவள் பத்தினியென்னும் பவித்திர நாமத்திற்கு யோகியதையாகாமல் தாசி யென்னும் நாமத்திற்குத் தக்கவளாகிருள். தாசி சுபகாரியங்களுக்கு அயோக்கியளென்பது சாஸ்திரோக்தமாகையால், ஒவ்வொரு புருஷரும் கிரயம்கொடுத்து (விலைக்கு வாங்கி) என்றென்றைக்கும் விவாஹம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அது சேவை தாசி விவாஹமாகிறது என்பது

சாஸ்திரோக்தமாகையால் இப்படிப்பட்ட கலியாணம் என்றென்றைக்கும் யாரும் செய்யவேகூடாது. இப்படிச்செய்தால் கன்னியாவிக்ரயம் அல்லது வரவிக்ரயம் அல்லது சந்தானவிக்ரயம்செய்த பாதகத்திற்கும், தோஷத்திற்கும் இன்னும் சேவை தாசி பாணிக்ரஹணம் செய்த பாவத்திற்கும் ஆளாகி துன்பப்படுவார்கள். இன்னுமிப்படி வாங்கின பணத்திற்கு மநுசுல்க மென்றுப்பெயர், இதற்கு சுருதி பிரமாணம்

### சுருதி சுலோஹம்.

நகன்யாயா : பிதா வித்வான் க்ருஹ்ணீயாச் சுல்க மண்வபி
க்ருஹ்ணன் சுல்கம் ஹிலோபேன ஸ்யான்னரோ பத்யவிக்ரயே(76)

ஸ்த்ரீதநாநி துயோமேஹா துபஜீவந்தி பாந்தவா :
நாரீயா நானி வஸ்த்ரம் வாதே பாபாயாந்த்யதோ கதிம் (77)

### புருஷ விவாஹ காலம்.

தீக்ஷையான பிறகு, 12 வருஷம் அல்லது அத்யயனம் பூர்ணமாகும்வரைக்கும் பிரம்ம சர்யம் ஆசரிக்கத்தக்கதென்றும் பிறகு யோக்கியனுனல் கிரஹஸ் தாஸ்ரமத்தை ஸ்வீகரிக்க வேண்டியதென்றும் மநுஸ்மிருதி 3-வது அத்தியாயம் ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறது, இன்னும்இதர கிரந்தங்களில் வரன் வயது, 18, முதல் 20 வரையில், விவாகம் செய்யத்தக்கதென்றும் இன்னும் சில கிரந்தங்களில் 18 முதல் 30 வயது வரையில், விவாஹம் செய்யத்தக்கதென்றும் 30 வயது புருஷன், 13 வயதுப் பெண்ணை மணஞ்செய்யலாமென்றும் இதை விட்டு புருஷ விவாஹம் சிறு வயதில் அதாவது வித்யார்த்தி காலத்தில் (வித்தை கற்கும் திசையில்) செய்வது சாஸ்திர சம்மதமானதன்றென்றும், பாலிய விவாஹம் அதம மென்றும் சாஸ்திரம் சொல்லப்பட்டது.

### வதுவின் லக்ஷணம்.

கன்னிகையின் மாதா பிதுர்வம்சத்தைப் பரீக்ஷித்த பிறகு உத்தம குணசீல குணவம்ச கன்னிகையைப் பார்த்து விவாஹம் செய்யத்தக்கது. இன்னும் வரன் வயதைவிட குறைந்த வயதுள்ளவளாயும் அண்ணன் தம்பியுள்ளவளாயும் பின்ன (வேறு) கோத்திரமுள்ளவளாயும் விவாஹம் செய்யத்தக்கது. இன்னும்

ஆஸ்வலாயன சூஸ்த்திர சுலோஹம்.

*ஜனபததர்மாக்ராம தர்மாஸ்லதான் விவாஹே பிரதீயாத்*

என்னும் ஆஸ்வலாயன சூஸ்திரப் பிரகாரம் தேசா சாரம் கிராமா சாரம் இன்னும் குலா சாரம் இவைகளையாவதும் விவாஹ சமயத்தில் விசாரிக்கத்தக்கது.

---

## ஸ்த்ரீ விவாஹகாலம்.

10 வயதுக்குமேல், 12 வயது வரையிலும் அல்லது ருது வாகும் வரையிலப் பெண்ணுக்குக் காந்தாரி யென்றுப் பெயர், ஆகையால் 13 வயதுக்கு மேற்பட்ட பெண்ணை விவாஹம் செய்யத்தக்கது. விவாஹ காலங்களில் ருது தர்சனமானல் ஸ்நாநம் செய்து வேறு வஸ்திராபரணங்களணிந்து ஹோமமம் செய்துப் பிறகு எல்லாக் காரியங்களும் செய்யலாமென்றும், புஷ்பவதியாகி, 3 வருஷம் வரையில் விவாஹம் செய்யலாமென் றும், ருதுமதியான, 3, வருஷங்களுக்குப்பிறகும் தகப்பன் விவா ஹம் செய்யாதிருந்தால் ரஜோதர்சனமான மூன்று வருடத்திற்கு மேற்பட்ட ஒவ்வொரு பிரவிடைக்கும் தந்தைக்கு புரூணஹத்ய தோஷ முண்டாகிறதென்றும் ரஜஸ்வலையான 3 வருடத்திற்கு மேல் 4-வது வருஷத்தில் தகப்பனை யெதிர்பாராது பெண்ணான வள் தானே வரனைத்தேடி விவாஹம் செய்துக் கொள்ளலாமென் றும், கலியாணமான பிறகு வதூவரர்கள் மூன்றிறவு அல்லது. 12 ராத்திரி அல்லது. ஒரு வருடம் பிரம்மசர்யமாயிருக்கவேண்டு மென்று ருக்வேதம் சாங்கியாயன சூஸ்த்ரமும், இன்னும். பராசர் ஸ்மிருதியும், சொல்லியிருப்பதாலும், இன்னும் விவாஹ காலத்தில் சப்தபதி சடங்கு மந்திரமும் பிரவிடையான கன்னிகையை யுத் தேசித்தே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க சிறுவயதில் விவாஹம் செய்வது அநேக இடையூறுகளுக்குக் காரணமாகின் றது, எப்படியென்றல் சிறுவயதில் விவாஹமான பெண் தன் புருஷன்வீட்டுக் குடும்ப வியவகாரமென்றும் தெரியாதவளாகியும். இளமைப் பருவமானதாலும். சிறுவயதிலேயே பிறந்த வீட்டை யும் தாய் தந்தையர்களையும், கூடப்பிறந்தவர்களையும் சிநேகர்களை யும் விட்டுப்பிரிந்த துன்பமும், பெண் சிறு வயதானபடியால் விளையாடுந்தன்மையை வரன் வீட்டார் சகிக்காது பலவகை ஏசல் கள் பாடுவதும், இதனல் தாய் வீட்டாருக்கு வசைச் சொற்களும் பெண் ருதுவாகி புருஷனுக்குத் தக்கவயது வராதிருந்தால் புருஷ

ன் வீட்டாருக்கும், பெண் வீட்டாருக்கும், துன்பமும், புருஷனுக்கு வயதுவந்து பெண் ருதுவாகாதிருந்தால் மாப்பிள்ளை வீட்டாருக்கு அதிருப்தியும் ஏற்படுகின்றமையாலும் இன்னும் சில அசந்தர்ப்பங்களில் பெண்தான் மணந்தயின்பம் ஒருநாளுநெங்காணுதவளாகித்துயருவும்,மனதுசலிக்கவும்,நேரிடுகிறபடியால்பெண்ணின் தாய் தந்தையர்களுக்குந் தீராக்கவலையும், வருத்தமும், அவமானமும்கூடசிலசமயங்களில் நேரிடுவதால் பெண்களைருதுவானபிறகே விவாஹம் செய்விப்பது மிகஉத்தமமானதாகயிருக்கிறது, இன்னும்

## வித்தியாப்யாசம்.

ஸ்திரீபுருஷரிருவரும் கல்வியுடையவர்களாயிருப்பின் அவர்களின் புத்திகூர்மையும் அதனாலவர்களுக்குண்டாகிற சவுக்கியமும், ஆநந்தமும், சொல்லவும் வேண்டுமோ, ஆகையால் ஆண்பெண் குழந்தைகளுக்கு பொதுவாக 16 வயதுவரையிலாவது. வித்தியாப்பியாசஞ்செய் விக்கவேண்டியது. தாய் தந்தையர்கள், குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளில், முதற்கடமையும், முக்கியகடமையுமாகும், மேலும், வித்தையில்லாத வீரசைவன், யானைக்குச் சமானமென்றும் அதாவது, கௌரவமுள்ள, மிருகத்திற்குச்சமமென்று சாஸ்திரங்களில், சொல்லப்பட்டிருக்கிறது. வித்தையென்றால், கல்வி, அல்லது படிப்பு எனப்பொருள், இன்னும் அமுதளிப்பதிலுங்கூட, ஆசாரமில்லாத ஜங்கமர், அநேகருக்கு அமுது செய்விப்பதைக் காட்டிலும், ஆசாரனும் சுசீலனுமான ஒரு ஜங்கமனுக்கேனும் அமுதளிப்பது உத்தம பலன்கிடைக்கும் எப்படியென்றால், இரத்தத்தில் தோய்த்த (நனைத்த) கையை ரத்தத்தினால் கழுவினலெப்படிச் சுத்தமாகாதோ, அப்படியாகத் தான் செய்த தோஷங்கள் தீருவதற்கு, மூர்க்க ஜங்கமருக்கு அமுதளிப்பதில் நிவிர்த்தியாவதில்லை. ஆனால் சுவல்ப பலன் கிடைக்கும். இன்னும் நமஸ்காரம் செய்வதிலுங்கூட தத்துவக்ஞானம் படிக்காமல் காதல்மாத்திரம் கேட்டஜங்கமனுக்கு நமஸ்காரம் செய்யக்கூடாதென்பது சாஸ்திரோக்தமும் இன்னும் குருமகனைலும தீக்ஷையில்லாவிடில் பாதபூஜைக்கு யோக்கியனல்ல, இன்னும் தீக்ஷையில்லாத மாங்கல்யஸ்திரீகள் சேசை நலுங்கு வைக்கக்கூடாது,இன்னும் குழந்தையில்லாத மலடியான மாங்கல்யஸ்திரீகள் ஆரதியெடுக்கக்கூடாது இன்னும் வியாதி மாந்திரீக நிமித்தமாகவும் சிவலிங்கதாரணமில்லாதவர்களிடத்திலும் தீக்ஷையில்லாதவர்களிடத்திலும் வீரசைவர்கள் மந்திரம் அல்லது பாடம்போட்டுக்கொள்ளக்கூடாது.

## வீரசைவனுடைய தர்மங்கள்.

வீரசைவனின் லக்ஷணங்களெவையென்றால், வீரசைவகுலத்தில் பிறந்தவன் சைவாகமங்களில் வல்லவனும் ஜிதேந்திரியனும் டம்பாதிகளில்லாதவனும் பரோபகாரமுள்ளவனும் ஷட்கர்ம நிரதனும், ஷடத்வக்ஞானமுள்ளவனும், சிவபூஜாதத்பரனும், சாந்தனும், அசூயையில்லாதவனும், நீளமான மீசைகளைவிடாதவனும், ரோகமி(வியாதியி)ல்லாதவனும், ஸ்திரச்சித்த (உறுதியான மனமுள்ளவ)னும்மந்திரம், தந்திரம், முத்திரை, இவைகளில் வல்லவனும், குருவாக்ஞையைப் பரிபாலனம் செய்யத்தக்கவனும், 32, நியாசங்களையும் தெரிந்தவனுமிருக்கவேண்டியது.

## புனர் விவாஹ சம்பிரதாயம்.

பெண்ணானவள் புருஷன் வீட்டிற்கு போவதற்கு முன்னமே புருஷன் காலகதியடைந்தால் (மரணமானால்) இரண்டாவது விவாஹம் செய்துக்கொள்ளலாமெனச்சாஸ்திரம்சொல்லுகிறது. ஆனால், இது வீரசைவரில் குருகுலத்தவருக்கும் மடாதிகாரிகளுக்கும் நிஷித்தமானது (கூடாது) எப்படியென்று விம்மாதிரியான ஜனங்களில் பிறந்த உத்தமமனிதனை பட்டாதிகாரி அல்லது சரந்தியாகச் செய்யவேண்டியதாகிறது, புனர்விவாஹ சம்மந்தம் செய்துக் கொண்டமனிதன் அல்லது அதில்கலந்துள்ள மனிதன் பட்ட சரந்தியாவதற்கு கூடாது, ஆனதாலனேக விதமான இந்த புனர் விவாஹ சம்பிரதாயம் ஜங்கமரில் என்றென்றைக்கும் செய்யக் கூடாது. இதர ஜனங்களில் மாத்திரம் முன்னைய புருடனுடைய அநுபோகத்திற்கு உள்பட்டவளானால் செய்வது கூடாது, முதல் புருடனுடைய அநுபோகத்திற்கு உள்படாதவளானால் புனர் விவாஹம் செய்வதற்கு ஆக்ஷேபணையில்லை. இதனால் ஸ்திரீயினுடைய பதிவிரதாதர்மத்திற்கு யென்றைக்கும் ஹானி (கெடுதி) யாகமாட்டாது, முதல்புருடனுடைய சம்போகத்திற்கு உட்பட்டவளாயிருந்து அகஸ்மாத்தா யப்புருடன் காலகதியானால் பிறகு மற்றொரு புருஷனைப்புனர் விவாஹம் செய்துக்கொண்டா விவள்பதிவிரதையாகமாட்டாள், இப்புனர் விவாஹத்தை குருலிங்கஜங்கமர்கள் ஆசரிக்கக்கூடாது, புநர்விவாஹம் செய்துக்கொண்டவளுடைய சிசுவின் வம்சமுள்ளவரைக்கும் புனர்விவாஹம் செய்துக்கொண்டவளும் அவளையடைந்த புருடன் சஹிதம் நரகபோகிகளாயிருப்பார்களெனச்சாஸ்திர சித்தாந்தமுண்டு, முதல்தடவை புநர்விவாஹம் செய்துக்கொண்டவள் அப்புருடனின் சம்போகத்திற்கு போகாத

முன்னமேயே புனர்விவாஹ புருடனும் காலக்ஷயடைந்தால் மறுப டியுமிரண்டாவது தடவை புனர் விவாஹம் என்றென்றைக்கும் செய்துக்கொள்ளக்கூடாது, தன்பதிவிரதாதர்மத்தை காப்பாற்றிக் கொண்டு யதியாஸ்ரமத்தை வாங்கிக்கொண்டு திரிகாலமும் இஷ்ட லிங்கபூஜை, இஷ்டலிங்க ஜெபம், இஷ்டலிங்கத்தைக் குறித்து தபசு முதலானவைகள் செய்யவேண்டுமேயல்லாது அன்யத்ரயம் செய்யக்கூடாது, கேள், பார்வதியெனப் பரமேஸ்வன் சொல்லி யிருக்கிறுர்,

## புனர்விவாஹ காரியம்.

இதுவும் விவாஹத்தைப்போலவே வஸ்திராலங்கார முதலா னது நிச்சயம் செய்துக்கொண்டு கங்கணம் கால்மோதிரத்தின் வகை புனர்விவாஹபுருடன் ஒருவராகன், பெண்வீட்டாருக்கு கொ டுக்கவேண்டியது, பிறகு ஒரு சுபமுகூர்த்தத்தில் கன்னியின் வீட்டி ற்கு வரனுவதும் அல்லது வரன்வீட்டிற்கு கன்னியாவதும் அழை த்து வந்து ஒருசபையைச்சேர்த்து என்றால் ஊரிலுள்ள பட்டாதி காரியையாவதும் அவரில்லாதிருந்தால் அவ்வூரில் மடாதிபதியாவ தும் இவருமில்லாதிருந்தால் அவ்வூரிலுள்ள ஜனங்களாவதும் அல் லது சம்பாவித ஜனங்களையாவதும் சேர்த்துப்பிறகு கொண்டுவந்த வஸ்திராலங்காரங்களை கன்னியினது சரீரத்தின்பேரில் அணியக் கொடுக்கவேண்டியது, பிறகுதாம்பூலம் சர்க்கரை அல்லது கல்கண் டெல்லா ஜனங்களுக்கும் கொடுத்தபிறகு புனர்விவாஹம் செய்து க்கொள்பவன் கொண்டுவந்த வஸ்திராலங்காரங்களாலவளைச்சிங்கா ரித்துக்கொண்டபிறகவள் ஜங்கமய்யர் பாதத்திற்கு நமஸ்காரம் செய்தபிறகு நான்குபேர்களுக்கு சாக்ஷி தாம்பூலம் கொடுக்க வேண்டியது, இதனுவிக்காரியம் செய்த மாதிரியாயிற்று, புநர் விவாஹம் செய்துக் கொள்பவளுடைய வஸ்திராலங்காரம் சிங் காரிப்பதற்கு முத்தெய்தியர்களான மாங்கல்ய ஸ்திரீகள் என் றைக்கும் போகக்கூடாது, புநர்விவாஹம் செய்துக்கொண்டவர் களும் புருஷனையிழந்த கிழவியர்களும் போவதற்கு ஆட்க்ஷே பணையில்லை, ஏனென்றால் மாங்கல்ய ஸ்த்ரீகள் இந்த அபசவ்யத் தின் புனர்விவாஹத்தைப் பார்க்கக்கூடாது, இப்புனர்விவாஹம் செய்துக்கொண்டவள் என்றென்றைக்கும் மாங்கல்ய ஸ்த்ரீயா (முத்தெய்தியளா)கமாட்டாள், இவர்களைவிவாஹகாரியத்தில் மாங்க ல்யஸ்த்ரீ (முத்தெய்தி) யாகநேமிக்க(நியமிக்க)க்கூடாது, மங்களகர மான காரியங்களுக்கெல்லாம் இத்தம்பதிகள் அசுபர்களென்றறிய வேண்டியது.

## விவாஹங்கள், 8, விதங்கள்.

சுலோஹம்

பிரஹ்மே தைவஸ்ததை வார்ஷ: பிராஜாபத்யஸ்ததாசுர:
கந்தர்வோ ராஷசச் சைவ பைசாசச் சாஷ்டமோதம: (78)

(1) பிராஹ்ம, (2) தைவ, (3) ஆர்ஷா, (4) பிரஜாபத்ய (5) அசுர, (6) கந்தர்வ, (7) ராக்ஷச, (8) பைசாசமென எட்டுவிதமா னவிவாஹங்களுண்டு, தற்காலமிவைகளில் பிரஹ்ம, மற்றும் கந்தர்வ இவ்விரண்டுவித விவாஹங்களே நடவடிக்கையிலிருக்கிறது. இவைகளின்லக்ஷணங்களாவன

## பிரஹ்ம விவாஹ லக்ஷணம்.

சுலோஹம்

ஆச்சாத்ய சார்ச்சயித்வாச ஸ்ருதிசீல வதேஹ்வயம்
ஆஹூய தானம் கன்யாயாப்ரஹ்மோதர்மா: ப்ரகீர்த்தித: (79)

வித்தையிலும் சத்குணங்களினலும் யுக்தனன வரனைத்தன் வீட்டிற் கழைத்து தன்மகளை வஸ்திராபரணங்களாலலங்கரித்து விதியுக்தமாக தானம்செய்வதே பிரஹ்ம விவாஹ மெனப்படும்.

## கந்தர்வ விவாஹ லக்ஷணம்.


சுலோஹம்

இச்சயான்யோன்ய சம்யோக: கன்யாயாஸ்ச வரஸ்யச
காந்தர்வ: சதுவிக்ஞேயோ மைதுன்ய: காமசம்பவ: (80)

வதூவரர்கள் பரஸ்பர பிரேமையினலும் விஷயாபிலாசையினலும் ஆகும் விவாஹத்திற்கு கந்தர்வவிவாஹமெனப்பெயர், அல்லது இதற்குப் பிரேமைவிவாஹ மென்றுலும்தகும், ஆனல் சகல விவாகங்களிலும் விஷயாபிலாஷை உத்தேசமிருந்தே யிருக்கிறது, ஆனலும் மேற்சொன்ன சுலோஹத்தில்,காமசம்பவ: என்னும்பதம் அதிகமாகச்சேர்ந்திருப்பதால் கிரந்தகாரரின் உத்தேசமிப்படியாயிருக்கலாம். ஆனல்காமஇச்சை உத்பன்னமாகி விவாஹவாசனையுண்டாகக் கூடிய பிராவிடை வயதுள்ள வதூவரர்களாயிருக்கவேண்டியது, என்றுல் இவ்விருவருடைய சம்மதத்தினலிவ்விவாகம் செய்யவேண்டியதாகிறது,

ஸ்ரீசத் குரு சுவாமினேநம:

(இஃது சுயம் புரோஹிதம்.)

வெகுகாலமாகப் பேர்போன.

# மாந்த சஞ்சீவி எண்ணெ.

குழந்தைகட்கு காமதேனு போன்றது
பாலியர்கட்கு—கற்பகதரு போன்றது
பெரியவர்கட்கு தேவாமிருதம் போன்றது

## (1) தீரும் வியாதிகள்.

சகல மாந்தங்கள், ஏங்கல், இரைப்பு, தெக்கத்திக்கணை, அசதி ஜன்னி, முகவாத ஜன்னி, முதலான ஜன்னிகள் 13-ம் பளவரை, முட்டடைப்பான், சுரம், சீதளம், அக்கினிமந்தம், அரோசகம், கபக்கட்டு, நெஞ்சுவலி, தொண்டைவலி, வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், வயிற்றில்பலவகை பூச்சிகள், கரப்பான்கள், கிரந்திகள் செவாப்பு, படை, சொரி, சிரங்கு, படர்தாமரை, கசுரிக்கை, புண்கள், கடிவாளப்புண், கெற்பவூரல், மேகவூரல், பேசப்படை, கட்டிகள், சுரக்கட்டி, கக்கிருமல், தொண்டைக்கட்டு, சகல காமாலை, மலக்கட்டு, அண்டவாய்வு, கல்லடைப்பு, மகோதரம், இளம்பிள்ளைவாத முதலான சகல வாதவலிகளும், சர்வதோஷங்களும், தீரும்.

## (2) அளவு

நான்கு நாள் குழந்தைக்கு, 4 துளியும் ஒருமாதக் குழந்தைக்கு, 10 துளியும் 3 மாதக் குழந்தைக்கு, 15 துளி அல்லது ஒரு காசளவும் 3 வயது முதல் 6 வயது வரையில், 50 துளி அல்லது காலணா அளவும், 12 வயது வரையில் 70 துளியும், பெரியவர்களுக்கு 100 துளி அல்லது அரையணா அளவும், அவரவர்கள் சரீரத்திற்குத் தக்கபடி கூட்டியும் குறைத்தும் கொடுக்கவும்.

## (3) அநுபானம்

குழந்தைகட்கும் பாலர் கட்கும் தாய்ப் பாலிலாவது, துணியில் வடிகட்டின வெள்ளாட்டுப் பாலிலாவது, பசுவின் பாலிலாவது கொடுக்கவும். பெரியவர் கட்கு வெள்ளாட்டுப் பால், பசுவின் பால், தேங்காய்ப் பால், சுக்கு கஷாயம் இவைகளொன்றில் சீனிசர்க்கரையும் இவ்வெண்ணெயும் சேர்த்துக் கொடுக்க நன்று.

## (4) பத்தியம்

வியாதி யுள்ளவர்களுக்கு எண்ணை குடுத்த நாள் முழுதும் அரிசிநொய் அல்லது ரவை முதலிய கஞ்ஜியில் உப்பு சேர்த்து சாப்பிடவும். வெள்ளாட்டுப்பால், பசுவின் பால், சக்குத்தாள் இவைகளும் சேர்த்துக்கொள்ளலாம். ரொட்டி, உப்புகலந்த சாதம் சாப்பிடலாம். புளி, புகையிலை, வாய்வு பதார்த்தங்கள், இனிப்பு வகைகள் சீதள பதார்த்தங்கள் கூடாது.

வியாதி யில்லாதிருந்து எண்ணை குடுத்தால் எவ்வித பத்தியமும் இருக்கவேண்டியதில்லை. புளிகலந்த மிளகுரசம் சாதம் சாப்பிடவும். நன்றாய் பேதியாகும்.

## (5) பேதிநிற்க

பேதி அதிகமானால் வசம்பு சுட்ட கரியாவது மாங்கொட்டைப் பருப்பாவது பாலிலாவது குளிர்ந்த ஜலத்திலாவது தேனிலாவது கலந்து உள்ளுக்குக் குடுத்து வயிற்றின்மீதும் தடவ பேதி நிற்கும் மோர்சாதம் சாப்பிட்டாலும் பேதி நிற்கும்.

வியாதி அதிகமாயிருந்தால் கம்பளித்துணி யென்னும் பிளானல் துணியை கொதிவென்னீரில் நனைத்துப் பிழிந்து முதுகு வயிறு மார்பு கழுத்துவரையில் ஒற்றடமிட்டு ஈரம்துடைத்து இவ் வெண்ணையை மேலுக்கு தடவவும்.

எண்ணை குடுத்தபிறகு வாந்தியாகி பேதி யாகாதிருந்தால் நெஞ்சிலிருந்த பித்தம் கபம் மாத்திரம் நீங்கிற்றென வரிந்து சற்று நேரம் கழித்தாவது மறுநாளாவது பூரா அளவு எண்ணைகுடுக்க பேதியாகி சுகப்படும். மறுநாளும் வியாதி கொஞ்சமிருந்தால் இவ்வெண்ணையில் கால்பங்கு அளவு உள்ளுக்குக் குடுத்து மேலுக்கும் தடவவும்.

## (6) வியாதி யில்லாத குழந்தைகட்கு

வழக்கமா இதை ஒருவாரம் அல்லது 10 - 15 நாளைக் கொரு தடவையாவது வயிற்றில் மந்தம், புளிப்பு, பொருமல், மலக்கட்டு, வயிற்போக்கு, முதலானவைகளுண்டாகி வயிர் சீர்கெட்டிருக்கும் போதாவது குழந்தைகளைக் கையிலெடுத்தால் பாரமாயிருக்கும்போதாவது உடனே இவ்வெண்ணை குடுத்துவந்தால் எவ்வகை வியாதியுமணுகாது.

விலை சீசா 1-க்கு ரு. 0—12—0

# வாத நிவாரண தைலம்.

## (1)—அளவு, அனுபானம்.

பெரியவர்கட்கு வேளை யொன்றுக்கு எட்டிலொருபங்கு வீதம் தினப்பிறதி காலை ஒருவேளை வீதம் 3 நாள், அல்லது 6 நாள், 6 வேளை சாப்பிடவும். 3, 4, தடவை பேதியாகும். அவரவர்கள் சரீரத்திற்குத் தக்கபடி அளவைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கவும். இதைதனியாகவாவது வடிகட்டின வெள்ளாட்டுப்பால், பசுவின் பால், தேங்காய்ப்பால், சுக்குகஷாயம், சர்க்கரை, இவைகளிலாவது சேர்த்து சாப்பிடவும்.

## (2)—பத்தியம்.

புளி, புகையிலை, வாய்வுபதார்த்தங்கள், ஒருவாரம்வரையில் கூடாது. வெள்ளாட்டுப்பால், பசுவின்பால், நெய், சர்க்கரை, துவரம் பருப்பு பயித்தம்பருப்பு, உப்பு சேர்க்கவும். தினப்பிறதி சாப்பிடுபவர்களுக்கு பத்தியமில்லை.

## (3)—தீரும்வியாதிகள்.

சரீரக்குத்தல், குடைச்சல், நடுக்கல், நடுக்குவாதம், தனுர்வாதம், சூலை, சூதகவலி, பக்கசூலை, பாம்புவிஷமுதலான சகலவிஷக் கடிகளும், வயிற்றுநோய், வயிற்றுவலி, மாரடைப்பு, மார்புநோய், மார்புவலி, வாதகுன்மம், வாதநோய்கள், விஷஜன்னி, வெதர்வாய்வு, வெதரில்சூலை, வெதரில்கட்டிகள், முதலான 8- வகை அண்டவாதமும் சகலவாய்வுகளும் வலிகளும் நாள்பட்ட வியாதிகளும் தீரும்.

அண்டவியாதிகட்கு இம்மருந்து உள்ளுக்குச் சாப்பிடுவதுடன் கழற்சிப்பருப்பு 1- இடையும், வெள்ளைப்பூண்டு, சுக்கு, நவாச்சாரமிவைகள் வகைக்கு ½ இடையும் கோழிமுட்டை வெண்கருவிட்டரைத்து அண்டத்தின்மீது 3, நாளல்லது 6, நாள் பூசவும்.

ஒரு பீஜம் பருமனுவதும் வற்றுவதும் தொட்டால் வலியில்லாமலுமிருந்தாலிது ஹிரணியமென்னும் ஆபரேஷன் வியாதியாகையாலிது சவுக்கியமாகமாட்டாது.

சூதகவலி, சூதகவயிற்றுவலி, முதலான கெற்பமுண்டாகாமலுள்ள ஸ்திரீகள் மாதவிடாயானநாள் முதல் தினப்பிறதி காலையில் 3, நாள் அல்லது 6, நாள் சாப்பிடவும். சூதகசம்மந்தமான வியாதிகளனைத்தும் மற்றும் கெற்பபின்னகோளாறுகளும் தீர்ந்து கெற்பத்தை நாசப்படுத்தும் புழுக்களும் செத்து உடனே கெற்பமுண்டாகும்.

பலஹீனமுள்ள ஸ்திரீகள் மாதவிடாயானநாள்முதல் 3- நாள் சாப்பிட்டுப் பிறகு மறுமாதம் மாதவிடாயானதும் மறுபடி, 3- நாள் சாப்பிடவும். அல்லது தினப்பிறதி காலையிலாவது மாலையிலாவது படுக்கைக்குப் போகும்போதாவது காலரை அல்லது அரையரை அளவு தினமொருதடவை கால், அரை, ஒருமாதம் சாப்பிட்டுவர மீதமுள்ளவியாதிகளும் மலபந்தமும் சகலவியாதிகளும் தீரும். பெரியவர்கட்கு 8 வேளைக்கும், சிறுவர்கட்கு 16 வேளைக்கு, முள்ள

சீசா.—1 க்கு விலை. ரூ 2—0—0

# இரண சம்ஹார தைலம்.

சொறி, சிரங்கு, புண்கள், புரை ரணங்கள் ஆராத அழிவிரணங்கள், குழந்தைகளுக்கு காலில்காணும் கரப்பான்புண், கடிவாளப்புண், ஈசுரிக்கை, முதலானவைகளை சாணக்காலாவது சோப்பினாலாவது இனப்பிசகி தேய்த்துக் கழுவி ஈரம்துவட்டி இத்தைலம் தடவிக் கொண்டுவரவும், ரணமதிகமிருந்தால் குங்குமம் வைக்கவும் மூன்றுதினத்தில் பூரண சுகமுண்டாகும் ராஜபிளவை, முதுகுபிளவை, முதலிய ஆராதரணங்களுக்கு இத்தைலம் தடவி ஊதாங்குழலால் ஊதிய பிறகு இத்தைலத்தில் நனைத்த துணியை புண்ணின் மேல் மூடிவாளத்தலை கண் (மூளை) வைத்திருந்தாலும் சஸ்திரசிகிச்சையின்றி குணமாகும். இதுஉண்மை, தற்புகழ்ச்சியல்ல. இரணங்களுக்கு இத்தைலத்திற்கு நிகரான தைலம் வேறுகிடையாது.

விலை சீசா 1க்கு ரூ. 0—6—0

# வயிற்றுக் கடுப்பு பவுடர்,—பல்பொடி.

அளவு — அனுபானம்

குழந்தைக்கு 1 முதல் 2 குன்றியிடையும், சிறுவர்க்கு 4 குன்றியிடையும், பெரியவர்க்கு 8 குன்றியிடையும், பாலிலாவது தேனிலாவது மோரிலாவது சர்க்கரையிலாவது தினமிருவேளை மூவேளை வியாதிக்குத் தக்கபடி 2 முதல் 6 நாள்வரையில் சாப்பிடவும்.

தீரும்வியாதிகள்

அதிசாரம், அஜீர்ணபேதி, சீதபேதி, ரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுவலி, கிருணி, வாய்ப்புண், இவைகள் தீரும். நீடித்தவியாதிகளுக்கு அரைமாதம் சாப்பிடவும்.

பத்தியம்

புளியம்பழபுளிப்புநீக்கி எலுமிச்சம்பழபுளிப்பு சேர்க்கவும்.

---

பல் துலக்கினபிறகு யிதில் ஒருசிடிகை எடுத்து பல் துலக்கிவர தந்தசூலை, பல்கூச்சம், பல்லசைவு பல்லரணை, ஈறுகரைதல், ஈறுவீக்கம், ரத்தம்வருதல், நாக்ககூரம், வாய்ப்புண், வாய்நாற்றம், இவைகள் தீரும். பல்லசைவு நீங்கி கெட்டிப்படும்.

சீசா 1 க்கு விலை, ரூ 0—5—0

கிடைக்குமிடங்கள்—வைத்தியம் செங்கைய்ய பண்டாரம் குமாரன்

குருசாமி பண்டாரம், துகை, சேலம்.

பண்டிட். B. S. சாஸ்திரிகள்,

போட்டோ சாமான் வியாபாரம், நெ. 10 பஜார் தெருவு சேலம்

---

ராமகிருஷ்ணா பிரஸ், வி. மார்க்கெட், சேலம்.

# நூதன லிங்கக்காய்

புதுமாதிரி சௌந்தர்யமான சஜ்ஜை (இதைச் சிறுவர் முதல் பெரியவர் வரையில் ஆண் பெண்களனைவரும் எவ்வகை வித்தியாசமுமின்றி அணிந்து கொள்ளத்தகுந்தது குனிந்து, வளைந்து, நிமிர்ந்து, ஓடிவேலை செய்தாலும், மார்புக்கு அடிபடாமலும் அதிக கனமும், பருமனு மில்லாமலும், வெகு வேலைப் பாடுடன்செய்யப் பட்டது, இதில் உபயோகமில்லாத விடங்களும், அழுக்கடையு மிடங்களும் பாசம் பிடிக்கு மிடங்களும் கிஞ்சிற்று மிருப்பதில்லை கயர் சீக்கிரம் அறுபடாத (அறுந்து போகாத) மாதிரியாக அமைக்கப்பட்டது, இதில் கீழ்மேல் பத்தவைப்புகளில்லாமலும், இருபக்கங்களில் அஷ்டதள (எட்டிப்பட்டை) கெட்டி குண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதால், இது இரண்டு மூன்று தலைமுறைகளுக்குதவும், அளவில் சிறிய உருவமாகையால் இதின் மீது சொக்காயணிந்தாலும் மார்புக்குமேலுயர்ந்துகாணப்படுவதில்லை,

சுத்த வெள்ளி சஜ்ஜை 1-க்கு விலை ரூ. 5 முதல் 7 ரூபாய் வரையிலும் தங்கத்தில் தேவையானால் 10 சவரன்களும் இதற்கு கூலி ரூ. 10—0—0 சேதாரம் அரைவராடையும் ஆகிறது, இவைகள் தேவையுள்ளவர்கள் முன்பணமனுப்ப வேண்டும் பதில் விரும்புவோர்கள் ரிப்ளை கார்ட் எழுதவும்.

# வைத்தியாம்சம்!

---

56 சயிட்டுள்ள புஸ்தகம் இதில் தாய்மார்களின் விஷயங்களும், சிசுக்களுக்கு வரும் நோய்களும் நோய்வரும் காலங்களும், பலவித தோஷங்கள், மாந்தம், கணம் இவற்றினுட் பிரிவு 8 விதங்களின் விபரங்களும், கிரந்தி இருவகையும், பாலக்கிரக தோஷங்கள் 16, பிரிவும், வைசூரியில் 14 வகையும் வாந்திபேதியில் 3 விதமும் பிளேக் வியாதியி லிருவிதமும் முடக்குமாரி, இன்புளுயன்சாசுரம் முதலான வியாதிகளின் குணங் குறிகளும் அவ்வவ் வகைக்குள்ள வாய்தா நாட்களும், பத்தியாபத்தியங்களும், அவரவர்கள் செய்துக் கொள்ளும் அவுஷதங்களும், குளிசங்களும், பூசைகளும், மந்திரங்களும் பரிகாரங் (சிகிச்சை) களும் சிலமுக்கியமான மருந்துகளின் உபயோகங்களும்ஒருங்கு சேர்த்து அனைவரும் சுகமுறக்கருதி உலோகோபகாரமாக வெளிப்படுத்தியது, இப்புஸ்தகம் தேவையுள்ளவர்கள் இரண்டணா தபால் முத்திரையுடன் விலாசம் தெரிவிக்கவும்.

**வை. செ. குருசாமி ஐயர்,**

குழை தேவம்

மாத வெளியீடு







ஸ்ரீ பஞ்சாசார்யேப்யோ நம:

தஸ்மாத் தஸ்மாச்ச கிரிஜே பஞ்சானன சமுத்பவா:
மதாதி சர்வலோகானும் ஜகத்குருவரோத்தமா:

# சிவ பக்தன்.

## பவ-வருஷம் ஆவணி மாதம்

### பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | வீரசைவ மதாசார சங்கிரஹம், | 1 |
| 2 | ருத்திர பாரதம், பிரசாத பாதோதகங்கள், | 9 |
| 3 | ஜாதக்கர்மலிங்கதாரணே விதி, | 17 |
| 4 | ஜங்கம ரென்பது யார், | 26 |
| 5 | தத்துப் புத்திர ஸ்வீகார விதானம், | 29 |
| 6 | சக்திவிசிஷ்டாத்வைத மதம், | 33 |
| 7 | வீரசைவரின் நியமங்கள், | 37 |
| 8 | லிங்காயுதமத பிரவர்த்தி, | 38 |
| 9 | விபூதி தயாரிக்கும் விதம், | 41 |
| 10 | ருத்ராக்ஷ உற்பத்தி | 11 |
| 11 | அயோக்கிய ஜங்மர்கள், | 42 |
| 12 | சந்தான விக்ரயம், | ,, |
| 13 | விவாஹ காலங்கள், | 43 |
| 14 | வித்தியாப்பியாசம், | 45 |
| 15 | புனர் விவாஹ சம்பிரதாயம், | 46 |
| 16 | வீரசைவனுடைய தர்மங்கள், | ,, |
| 17 | விவாஹங்கள் (8) விதம், | 48 |